புதிப்புச் செலவுகள் அதிகரிக்கின்றன பக்கமொன்றின் விலை 0.94 சதத்தால் அதிகரிக்கிறது 'மலைமுரசை ஆதரியுங்கள்'

அறைவு 02 இயம் 16 November 23 - 29, 2013

# மலைமுரசு

MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

வார இதழ்

விலை : 25.00 பக்கங்கள் : 16 Registered as a newspaper in Sri Lanka பிரதி சனிதோறும் வெளியாகும் வார இதழ்

# நாம் சிறுபான்மை இனம் அல்ல





(கீத்)

தமிழ் மக்கள் சிறுபான்மை இனம் அல்ல, அவர்கள் சுயநிர்ணய உரிமைகளை கோருவதில் எந்த தவறையும் நான் காணவில்லை. ஆனால் சுயநிர்ண யத்தை வெல்வதற்காக ஆயுதம் தாங்கிய போரை இனி எந்த காலத்திலும் நான் எதிர்பார்க்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். திருகோணமலை கிளிவெட்டியில் அண்மையில் நடைபெற்ற மக்கள் போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

03

## யார் அந்த மர்ம மனிதர்கள் ??

நிந்தவூர் - அட்டாளைச்சேனைப் பிரதான வீதியில் தடைகளை ஏற்படுத்தி மக்கள் பேராட்டம் வெடித்தமைக்குக் காரணம் அங்கு நடமாடும் மர்ம மனிதர்களே என போராட்டக்காரர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்துள்ளனர்.






(ஸ்ரீ)

03

## அதிபரின் தடியடியில் மாணவர்கள் காயம்

மட்டக்களப்பு களுதாவளை இராமகிருஸ்ண வித்தியாலய அதிபர் 15 க்கு மேற்பட்ட 8ம் தர மாணவர்களை மிக மோசமாகத் தாக்கியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

களுதாவளை இராமகிருஸ்ண வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றும் அதிபர் 19.11.2013 அன்று மூங்கில் தடிகளினால் தாக்கியதனால் சில மாணவர்களுக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளதுடன். பல மாணவர்களின் கால்கள் வீக்கமுற்று இருக்கின்றன.

இவ்விடயம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் கூறுகையில்.

குறித்த வகுப்பில் மூன்று



மாணவர்கள் வகுப்பறையை விட்டு வெளியில் சென்றிருக்கின்றனர். அப்போது உள்ளே வந்த ஒரு ஆசிரியை வகுப்பில் இருந்த மாணவர்களை முழங்காலில் இருக்கச் சொல்லி இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல்

03




## வேறு பேருந்தில் ஏறிய மாணவனைத் தாக்கிய சாரதி - திருமலையில் சம்பவம்

வழமையாகப் பயணிக்கும் பேருந்தை விடுத்து வேறொரு பேருந்தில் பயணித்ததைப் பொறுக்க முடியாத சாரதியொருவர் மாணவன் ஒருவனைத் தாக்கிய சம்பவம் ஒன்று திருமலையில் பதிவாகியுள்ளது.

இருநாட்கள் தாக்கப்பட்ட அம் மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதே இவ்விடயம் தெரியவந்துள்ளது.

தாக்கப்பட்ட மாணவனை 19ம் திகதி மலைமுரசினர் சந்தித்த போதே

03



## சம்மாந்துறைப் பிரதான தபாலகத்தின் நிலை

(துறையூரான்)



யாரும் கவனிப்பாரற்று மூன்று தசாப்த காலமாக எந்தவித அபிவிருத்திகளும் இல்லாமல் உடைந்த பாதுகாப்பற்ற பழைய கட்டிடத்தில் இயங்கி வரும் சம்மாந்துறை பிரதான தபால் நிலையம் தொடர்பில் மக்கள் வேதனையும் கவலையும் அடைந்துள்ளனர்.

03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmailcom
0754252042 fax: 026 2223071

## வணக்கம்

### சிறுபான்மை என்னும் ஆதிக்கச் சொல்!

இலங்கையின் மக்களை இரண்டாக வகுத்து நோக்க வகை செய்திருக்கின்றோம் நாம்.

பெரும்பான்மையினர் என்றும் சிறபான்மையினர் என்றும் வகுத்து சிறுபான்மை என்னும் அச் சொல்லை தமிழராகிய நாம் எமக்கு உரித்தான சொல்லாக ஏற்றுக்கொண்டும் விட்டோம்.

சனநாயகம் என்னும் சுவட்டில் பயணிக்கும் நாடொன்று அனைத்து மக்களையும் பிரதிநிதித்துவப் படுத்தியே தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது. அதுவே சனநாயகத்தின் பிரதான அச்சு எனக் கொள்ளப்படுகின்றது.

அவ்வாறு அனைத்து மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி தீமானம் ஒன்றை மேற்கொள்ள முனையும் போது தான் அனைவரும் தமது விருப்பு வெறுப்புக்கு ஏற்ப அத் தீமானம் தொடர்பாக வாக்களிக்க வேண்டி ஏற்படுகின்றது.

அங்குதான் பெரும்பான்மை என்னும் வார்த்தைப் பதமும் சிறுபான்மை என்ற வார்த்தைப் பதமும் பயன் படுத்தப்படுகின்றன. சனநாயகத்தின் பெயரால் பயன் படுத்தப்பட்ட வார்த்தைகள் வாக்குகளிலிருந்து வாழும் மக்களின் எண்ணிக்கைக்கு எவ்வாறு பிரயோகிக்கப்பட்டது என்பதே இங்கு கேள்விக்குறியாகின்றது.

அதைக் கேள்விக் குட்படுத்தாமல் நாம் ஏற்றுக்கொண்டது அடிமைத்தனத்தை உவந்து ஏற்றுக்கொண்டதற்கு ஒப்பாகப் போய்விட்டது.

அதைத்தான் தமிழத் தேசிக் கூட்டமைப்பின் தலைவர் திரு. இரா. சம்பந்தன் அவர்கள் கிளவெட்டிப் போராட்டத்தில் தெரிவித்திருக்கின்றார்ர் போலும்...

நாம் சிறுபான்மை இனம் அல்ல... தனித்துவமான இனம், சுயநிர்ணய உரிமைகொண்ட இனம் என அவர் அடித்துக் கூறியிருக்கின்றார்.

சுயநிர்ணயம் என்பதும் சனநாயகத்தின் அடிப்படைப் பண்புகளில் ஒன்றுதான்... ஆனால் அதை யார் தீர்மானிக்க வேண்டும் என்பதில் தான் எமது பிரச்சனை தங்கி நிற்கின்றது.

ஈழத் தமிழ் இனம் தனித்துவ சுய நிர்ணய உரிமை கொண்ட இனமாக வாழ்ந்த காலம் ஆங்கில ஆட்சிக்கு முன்னர் இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது...

சில நூற்றாண்டுகள் கடந்த நிலையில் அதைச் சிதைத்து விட்டு சுயநிர்ணயம் கொண்ட இனத்தைச் சிறுபான்மை இனம் என வகுத்ததை நாங்கள் யாரும் அடிமைத்தனமாக ஏற்றுக் கொள்ளவில்லையே அன்று....

இனியாவது "சிறுபான்மையினரான தமிழர்களாகிய நாங்கள்" என்ற வார்த்தையைப் பாவிக்காமல் விட்டுவிட அனைவரும் பழகிக் கொள்வோமா?.......

## என்று தீரும் இந்த அவலம்?



திருகோணமலைப் பொது வைத்தியசாலையில் 12ம் தொகுதியில் (வாட்டு) திடீரென ஏற்பட்ட இட நெரிசலால் நோயாளியொருவர் நிலத்தில் படுக்க வைக்கப்பட்டிருப்பதையே படத்தில் காணுகின்றீர்கள்.

நல்ல நாட்களில் வசதி படைத்தவர்கள் இணைந்து கட்டில்களைப் பொது வைத்தியசாலைக்கு வாங்கி வழங்கினால் என்ன???????

## தறுஸ்லாம் மகாவித்தியாலய நிகழ்வு

.2013ம் ஆண்டிற்கான தறுஸ்ஸலாம் மகா வித்யாலயத்தின் சாதாரண தர தின நிகழ்வு இன்று (21) பாடசாலை அதிபர் தஸூல் தலைமையில் பாடசாலை ஆராதனை மண்டபத்தில் இடம் பெற்றது.

இன் நிகழ்வுக்கு பிரதம அதிதிகளாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் விமலவீர திஸாநாயக்க ,கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எல்.ஏ. அமீர் மற்றும் சம்மாந்துறைப் பிரதேச சபையின் தவிசாளரும் ஜனாதிபதியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளருமான ஏ.எம்.எம்.நௌஷாட் அவர்களும் கலந்து கொண்டனர்.

மேலும் கோட்டக்கல்வி அதிகாரிகள் ,வலயக்கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் மற்றும் மானவர்கள் உட்பட பலரும் இன் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

இந் நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் விமலவீர திஸாநாயக்க அவர்களுக்கு நினைவுச் சின்னம் ஒன்றும் வழங்கப்பட்டது. (பர்ஹான்)



## பன்முக ஒதுக்கில் அன்வரின் உதவிகள்

குச்சவெளி பிரதேச செயலகத்தில் கடந்த 20ம்திகதி காலை 10.00 மணியளவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர் அன்வரின் பன்முகப்படுத்தப்பட்ட மாகாண சபை உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் குச்சவெளி பிரதேச செயலகத்திற்குற்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற விதவைகள் மாற்றுவலுவுடையோர் போன்றோருக்கு சுயதொழிலை ஊக்குவிக்கும் நோக்கில் ரூபா 15000 பெறுமதியான காசோலை வழங்கி வைக்கப்பட்டது.

அத்துடன் குறித்த பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் மதஸ்தலங்களுக்கான ஒலி பெருக்கித் தொகுதிகளும் வழங்கி வைக்கப்பட்டது இந் நிகழ்வில் குறித்த பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திட்டமிடல் அலுவலர் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர





## மாகாண விஞ்ஞான வினாவிடைப் போட்டி

(ஹயக்ரீவன்)

16.11.2013 ஆகிய இன்று தி-உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் இவ்வருடத்திற்குரிய மாகாண மட்ட விஞ்ஞான வினா விடை போட்டி நடைபெற்றுள்ளது.



## கங்கைப் பாலத்திற்கு அருகில் கசிப்பு

காவல்துறையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து மூதூர் கங்கையாற்றுப் பாலத்திற்கு அண்மையாகவுள்ள நன்னிப் பகுதியில் கசிப்புற்பத்திப் பொருட்கள் கைப்பற்றப் பட்டுள்ளன.

மூதுார் காவல்துறையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 4 பரல் சோடாவும் உபகரணங்களும் தோணியொன்றும் கடந்த செவ்வாய்க்கிழமை (20) அவ்விடத்தில் கைப்பற்றப்பட்டுள்ளன. எனினும் சந்தேகநபர்கள் எவரும் அச் சந்தர்ப்பத்தில் கைது செய்யப் படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

## - கல்லடியில் டெங்கு ஒழிப்பு நிகழ்வு -

மட்டக்களப்பு கல்லடி பகுதியில் டெங்கு ஒழிப்பு சம்பந்தமான வேலைத் திட்டமும் மக்களுக்கான, விழிப்புணர்வூட்டும் நிகழ்வும் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது . சுகாதார பரிசோதகர்களும் சுகாதார அதிகாரிகளும் காத்தான்குடி காவல் அதிகாரி தலைமையில் காவல்துறையினரும் விசேட அதிரடிப்படையின் அதிகாரி தலைமையில் களுவாஞ்சிகுடி .மட்டக்களப்பு விசேட அதிரடிப்படையினரும் இப்பணியில் ஈடுபட்டனர். துப்பரவுப் பணியில் ஈடுபடுவோரையும் வீடுவீடாகச் சென்று மக்களுக்குக் கருத்தூட்டுவதனையம் காணலாம். (சச்சு)





## குச்சவெளியில் நபரொருவர் அடித்துக் கொலை

குச்சவெளி காவல்துறை வலயத்திற்குட்பட்ட இறக்ககண்டி, வாலையூத்து 19ம் கட்டைப் பிரதேசத்தில் ஆண் ஒருவரின் சடலம் 20ம் திகதி காலை கண்டெடுக்கப்பட்டுள்ளது. சுமார் 30 தொடக்கம் 35 வயது மதிக்கத்தக்க அச் சடலத்தின் தலைப்பகுதியில் கடுமையான காயமொன்று காணப்பட்டுள்ளதுடன் மூளைப் பகுதி சிதைவடைந்தும் காணப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆயுதம் அல்லது இரும்புக் கழியினால் தாக்கப்பட்டே அந் நபர் மரணம் அடைந்திருக்க் கூடும் என சந்தேகம் நிலவுகின்றது. (திருமலை கீத்)



## சிந்திக்கத் தூண்டும் பாடசாலையொன்றின் அறிவிப்புப் பலகை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுபான்மை இனமல்ல...

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையில் எமது பிரச்சினைகள் முன்வைக்கப் பட்டுள்ளன. இதனால் எமது கோரிக்கைகளை புறந்தள்ளி விட அரசாங்கத்திற்கு முடியாது. முன்பு ஒருபோதும் இல்லாத வகையில் எமது பிரச்சினைகள் குறித்த கவனத்தை ஏற்படுத்த எம்மால் முடிந்துள்ளது.

சம்பூர் முகாம்களில் வாழ்ந்து வரும் மக்கள் பல நூறு ஆண்டுகளாக தமது பாரம்பரிய மண்ணில் வாழ்ந்து வந்தனர். கொட்டியார் முதல் வெருகல் வரையில் தமிழ் பேசும் மக்களே வாழ்ந்து வந்தனர் என்பதை யாராலும் மறுக்க முடியாது எனத் தெரிவித்த அவர் சம்பூரில் முகாம்களில் வாழ்ந்து வரும் மக்களுக்கு அவர்களின் பாரம்பரிய நிலங்களை வழங்குமாறு நாம் நாடாளுமன்றத்தில் பல முறை கோரிக்கை விடுத்தோம் என்றார். மக்களின் மீள்குடியேற்றமே மிக முக்கியமான தேவையாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## யார் அந்த மர்ம...

நிந்தவூர் பகுதியில் இரவு வேளைகளில் தொடர்ச்சியாக கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்தல் மற்றும் கொள்ளையர்களை கண்டு பிடித்தல் தொடர்பில் விசேட விழிப்பு குழுவொன்று அமைக்கப்பட்டு ஆராயப்பட்டது.

இதன் பிரகாரம் இரவு 9 மணிக்கு பின்னர் வீடுகளிலிருந்து வெளியே செல்கின்றவர்கள் தங்களுடைய ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களை எடுத்துச் செல்ல வேண்டும் என்று அந்த குழு தீர்மானித்தது. அந்த தீர்மானத்தை பள்ளிவாயில்களின் ஊடாக பொதுமக்களுக்கு அறிவித்தது.

இந்நிலையில், விசேட அதிரடிப்படையினர் அணியும் ஆடைகளை ஒத்த ஆடைகளை அணிந்து நிந்தவூர் கடற்கரை பகுதிக்கு வந்த நான்கு அல்லது ஐந்து பேர் அடங்கிய குழுவினர் கடற்கரையில் வைத்து ஆடைகளை மாற்றிக்கொண்டு கடந்த ஞாயிறு இரவு ஊருக்குள்



## வேறு பேருந்தில்...

அவர் இத் தகவலை வெளியிட்டுள்ளார்.

திருகோணமலை நிலாவெளி பாடசாலையொன்றில் 10ம் வகுப்பில் கல்வி கற்கும் மாணவனான யோகராசா ஆதர்சன் என்பவருக்கே இந்நிலை நேர்ந்துள்ளது.

கடந்த ஒரு வருடமாக வழமையாகப் பேருந்து ஒன்றில் பாடசாலைக்குச் சென்று வந்ததாகவும் கடந்த சில நாட்களாக அப்பேருந்து காலதாமதமாகி வருவதால் மற்றொரு பேருந்தில் பயணம் செய்ததாகவும் அதனைப் பொறுக்க முடியாது முன்னைய பேருந்துச் சாரதி தன்னைத் தாக்கியதாகவும் அவர் தெரிவித்தார்.

வருவதை கண்ட பொதுமக்கள் அவர்களை சுற்றிவளைத்து ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துமாறு கேட்டுள்ளனர்.

ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த தவறிய அவர்கள், தங்களை சுற்றிவளைத்த மக்களை தாக்கிவிட்டு தப்பியோடுவதற்கு முயன்றுள்ளனர். சம்பவத்தை கேள்வியுற்று அரசியல்வாதிகளும் அவ்விடத்திற்கு விரைந்துள்ளனர். அதே வேளை அவ்விடத்திற்கு வருகை தந்த அதிரடிப்படையினர் மக்களை அவ்விடத்தை விட்டு விலகிச் செல்லச் செய்ய வானத்தையும் நிலத்தையும் நோக்கி வேட்டுக்களைத் தீர்த்ததாகவும் அதன் பின்னர் மக்கள் பிடித்து வைத்திருந்தவர்களை அவர்கள் மீட்டுச் சென்றுள்ளதாகவும் தெரிவித்தனர்.

(பர்ஹான் - சச்சு)

## சம்மாந்துறைத்...

சம்மாந்துறை பிரதான தபாலகம் அம்பாறை மாவட்டத்தில் அதிகூடிய சனத்தொகையினையும் நிலப்பரப்பையும் கொண்டிருப்பதுடன் (09)ஒன்பது உப தபாலகங்களை நிர்வாகித்து வருகின்ற ஒரு பிரதான தபாலகமாகும்.

ஏனைய சிலபிரதேசங்களில் காணப்படும் உப தபாலகங்களை விடவும் அடிப்படை வசதிகளற்ற நிலையில் சுற்று வேலிகள் கூட இல்லாமல் கட்டாக் காலிகளின் சரணாலயமாகக் காட்சிதருவதுடன் ஜன்னல் கண்ணாடிகள் நீண்ட காலமாக உடைந்து காணப்படுகின்றதுடன் சுவர்களுக்கு வர்ணப்பூச்சி கூட பூசப்படவில்லை.

இந்த நிலமையினை அறிந்திருந்தும் தபால் திணைக்களம் இதுவரை எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்காமல் இருந்து வருவது இப்பிரதேசத்தை புறக்கணிக்கின்ற ஒரு செயலாக கருதுவதாக இப்பிராந்திய மக்களும், பொதுநல அமைப்புக்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

## தடியடி...

வைத்திருக்கின்றார்.

அப்பொழுது மூங்கில் தடிகளுடன் வந்த அதிபர் மிக மோசமாக மாணவர்களைத் தாக்கியுள்ளார்.

பாடசாலை விட்டதும் மாணவர்களில் பலர் நடந்து செல்ல முடியாத நிலையில் சென்றிருக் கின்றனர். அதை

இவ்விடயம் தொடர்பில் பெற்றோரினால். களுவாஞ்சிகுடி காவல் நிலையத்திலும் பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளரிடமும் மேற்கொள்ளப் பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய விசாரணைகள் 21ம் திகதி முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதேவேளை 21ம் திகதி காலை பெற்றோர்கள் சிலரால் பாடசாலைக் வாயிலிற்கு அருகில் ஆர்ப்பாட்டம் ஒன்றும் முன்னெடுக்கப பட்டுள்ளது. காவல்துறையின் தலையீட்டால் இவ்வார்ப்பாட்டம் கலைக்கப்பட்டது. தான் அடித்ததை மலைமுரசின் பத்திரிகையாளரிடம் ஒப்புக் கொண்ட அதிபர், மாணவர்களுக்கு அந் நேரத்தில் காயம் ஏற்பட்டதா? என்பதைத் தான் அவதானிக்கவில்லை எனத் தெரிவித்தார். மேலும் தனக்கெதிரான சக்திகளின் சூழ்ச்சிகளாகவே இவை திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



## கிழக்கு ...

பட்டிருப்பதாகவும் மாவட்டச் செயலகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்விழப்பீட்டிற்கு அமைச்சு 2.5 கோடி ரூபாய்கள் ஒதுக்கியுள்ளதாகத் தெரிவித்த மொத்தமாக 252 பேருக்கே இழப்பீடு வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

## ஆர்ப்பாட்டத்தில்...

கொண்டோர் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு எதிராகவும் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பூ.பிரசாந்தனுக்கு எதிராகவும் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

அதேவேளை அன்றைய தினம் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் அமளிதுமளி எழுந்துள்ளது.

காணி விடயம் தொடர்பாக எழுந்துள்ள இச் சர்ச்சையைத் தீர்க்க அரச அதிபரின் தலைமையில் குழுவொன்று உருவாக்கப் பட்டுள்ளது.

அக்குழுவின் முடிவுகளின் அடிப்படையிலேயே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

## டீசலில் மண்.....

இயந்திரங்கள் பழுதடைந்ததைத் தொடர்ந்தே படகோட்டுனர்களுக்கு நிலைமை விளங்கியுள்ளது.

சுமார் நானூறு ஆயிரம் ரூபாய்களைச் செலவு செய்யதே இவ்வியந்திரங்களைத் திருத்த முடியும் என ஓட்டுனர்கள் தெரிவித்தனர். அன்றைய தினம் சுமார் 25 படகுகள் தொழிழிகுச் செல்லாமலிருந்தன. அத்துடன் ஹம்பாந்தோட்டையிலிருந்து கொண்டு வரப்பட்டிருந்த எரிபொருளுடன் வழங்கப்பட்ட எரிபொருளை ஒப்பிட்டுப்பார்த்த போது மாற்றம் காணப்பட்டுள்ளது.

## சம்மாந்துறையில் நடமாடும் சேவை

சம்மாந்துறைப் பிரதேச சபையின் வரலாற்றில் முதல் தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நடமாடும் சேவை கடந்த 16ம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரைக்கும் சம்மாந்துறை அப்துல் மஜீட் நகர மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வு சம்மாந்துறைப் பிரதேச சபையின் தவிசாளரும் ஜனாதிபதியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளருமான ஏ.எம்.எம்.நௌஷாட் அவர்களின் வழிகாட்டலுடன் அவரது தலைமையில் நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவையில் திண்மக்கழிவு முகாமைத்துவப் பிரிவு, மத்திய சுற்றாடல் அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, தொழில்நுட்ப பிரிவு, சனசமூக அபிவிருத்திப் பிரிவு, மின்சார சபை, நீர்வழங்கல் பிரிவு, பொதுச்சுகாதாரப் பிரிவு, சம்மாந்துறைப் காவல் நிலைய சுற்றாடல் பாதுகாப்பு பிரிவு, சம்மாந்துறைப் பிரதேச செயலகத்தின் கிராம சேவையாளர்கள் பிரிவு என்பன கலந்துகொண்டு சேவையாற்றப்பட்டன.

(பர்ஹான்)

## கிழக்கின் ...

இந்த நிகழ்வில் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாஉல்லா, கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீட், பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே நாடாளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாண அமைச்சர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது அம்பாறை மாவட்டத்தில் அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள பட்டிமேடு மேய்ச்சல் நிலம், விவசாயக் காணிகள், பொத்துவில் கரஞ்சோலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மங்களகம, ஏறாவூர் பற்று, வவுணதீவு, அம்பாறை - மட்டக்களப்பு எல்லைப் பிரதேசங்கள், திருகோணமலை மாவட்டத்தில் புல்மோட்டை, குச்சவெளி போன்ற பிரதேசங்களின் காணப்பட்டு வரும் காணிப் பிரச்சினைகள் தொடர்பில் விசேடம் கவனம் செலுத்தப்பட்டது.

மூன்று மாவட்டங்களினதும் பிரதேச மற்றும் மாவட்ட மட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் காணி பிரச்சினைகள் தொடர்பில் அனைத்து தரப்பினரையும் அழைத்து பொது இணக்கப்பாடின் மூலமாக ஒரு தீர்வுக்கு வருமாறு அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த இதன்போது ஆலோசனை வழங்கினார்.

## விபுலானந்தாவில்....

மாணவர்களும் கௌரவிக்கப் பட்டனர்.

இந் நிகழ்விற்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.கே.ஸ்ரீகாந்தா, ஓய்வு பெற்ற இ.கி.ச. ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி அதிபர் திரு.மா. இராசரெத்தினம், செலிங்கோ லைவ் கம்பனி மாவட்ட முகாமையாளர் திரு. ஜெயசுந்தர, திரு அலெஸ்சாண்டர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தங்கத் தீர்வை வரி குறைந்தது

தங்கத்துக்கான இறக்குமதி தீர்வை குறைக்கப்பட்டுள்ளது.

10 சதவீதமாகக் காணப்பட்ட தங்கத்துக்கான இறக்குமதி தீர்வை 7.5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது என்று சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## பார் வீதியின் கழிவு வாய்க்கால் - டெங்கை உருவாக்குமா?

மட்டக்களப்பு பார்வீதியூடாக செல்லும் கழிவு நீர் கால்வாயானது இரண்டு வருட காலமாக சுத்தம் செய்யப்படாத நிலையில் காணப்படுவதால் சரியான முறையில் நீர் வழிந்தோடும் தன்மை இல்லாததனால் நீர் தேங்கி நிற்கும் நிலை காணப்படுகின்றது. இதனால் நோய்கள் பரவும் நிலை



காணப்படுவதாகவும் மாரிகாலத்தில் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாகவும் நீண்ட காலமாக மாநகரசபை இதனை கவனிக்காமல் இருப்பதாகவும் இக் கால்வாயை அண்டி வாழும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாயமும் சனல் 4

தொடர்ச்சி.......

இம்முறை இசைப்பிரியாவின காட்சிகள், தாயகத்திலும், தமிழ் நாட்டிலும் இதுவரையிலும் கருத்துத் தெரிவிக்காத தரப்புக்களையும் பேச வைத்திருக்கிறது. குறிப்பாக, தமிழ் நாட்டில் ஆளுங்கட்சியின் பிரதானிகள் சிலர் பொதுசன மனோநிலையை பிரதிபலித்திருக்கின்றார்கள்.

எனவே, சனல் நாலின் காணொளி இந்திய ராஜதந்திரிகளையும், கொள்கை வகுப்பாளர்களையும் நெருக்கடிக்குள்ளாக்கியிருக்கின்றது.

இரண்டாவதாக மேற்கத்தையத் தலைவர்களையும் அது மனித உரிமைகள் குறித்து முன்னரைவிடக் கூடுதலாகப் பேசுமாறு தூண்டியிருக்கிறது. அவர்கள் சிலவேளை கொமென் வெல்த் மாநாட்டை இலங்கை அரசாங்கத்திற்கு மனித உரிமைகள் தொடர்பில் வகுப்பெடுக்கப் பயன் படுத்தக்கூடும்.

ஆனாலும், ஏனைய எல்லா கொமென் வெல்த் நாடுகளை விடவும் இந்தியாவுக்கே சனல் நாலும், கொலம் மக்ரேயும் சோதனைகளை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இதனால் தான் இந்தியா கொலம் மக்ரேக்கு விசா வழங்க மறுத்ததா?

தமிழ் நாட்டைத் தாண்டி இலங்கைக்கு வந்தால் அது சிலசமயம் தேர்தலில் எதிரொலிக்கக்கூடும். அதேசமயம் வராமல் விட்டால் அது மேற்கிற்கும் இந்தியாவுக்குமான பொது நிகழ்ச்சி நிரலை நெருக்கடிக்குள்ளாகும். இந்தியா பங்குபற்றவில்லை என்றால் அந்த மாநாடு அதன் பொலிவை இழந்துவிடும் உலகின் மிகப் பெரிய கொமென் வெல்த் நாடு இலங்கை மாநாட்டைப் புறக்கணிப்பதானது இலங்கைஅரசாங்கத்தை அவமானப் படுத்தும். அதோடு மாநாட்டின் அந்தஸ்தையும் குறைக்கும்.

இது இலங்கை அரசாங்கத்தை மேலும் சீனாவை நோக்கி உந்தித் தள்ளுவதில் முடியும் என்று கேர்ணல் ஹரிஹரன், சிவசங்கர் மேனன் போன்றவர்கள் எச்சரிக்கின்றார்கள். அதாவது இந்தியத் தலைவர் பங்கு பற்றாவிட்டால் அது இலங்கை அரசாங்கத்தை வளைப்பதற்குப் பதிலாக முறிக்கும் தரப்புக்களையே பலப் படுத்தும் என்ற ஓர் அச்சம் இந்திய கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் காணப்படுகிறது.




மூன்றாவது, தமிழ் மிதவாதிகள். மென்சக்திகளைப் போலத் தோன்றும் தமிழ் மிவாதிகளைப் பலப்படுத்துவதே இப்போதுள்ள அனைத்துலக நிகழ்ச்சி நிரல் ஆகும். ஆனால், பொதுத் தமிழ் மனோநிலை கொதிப்படையும் போதெல்லாம் தமிழ்மிதவாதத்தின் இயலாமையும், கையாலாகாத்தனமும் வெளிப்படையாகத் தெரியவரும்.

புதுப்பிக்கப்படும் தமிழ்க் கோபமானது மென்சக்திகளையல்ல, வன்சக்திகளையே ஊக்குவிக்கும். பழிவாங்கும் உணர்ச்சியும், ஆற்றாமையும் கலந்துருவாகும். பொதுத் தமிழ் மனோநிலையானது எப்பொழுதும் மிதவாதிகளில் பிழை கண்டுபிடிக்கவே முற்படும். மிதவாதிகளால் என்றைக்குமே அந்தக் கோபத்திற்குத் தலைமை தாங்க முடிந்ததில்லை.

இசைப்பிரியாவின் காட்சிகள் வெளிவந்ததை, உடனடுத்து, கூட்டமைப்பு சாதித்த மௌனம் சில ஊடகங்களால் சுட்டிக்காட்டப்பட்டது. அது ஒரு கள்ள மௌனமாயுமிருக்கலாம். அல்லது ஓய்வூதியர் தேசியத்தின் இயல்பான மந்தத் தனமாகவும் இருக்கலாம்.

எதுவாயினும், ஊடகங்களில் சுட்டிக்காட்டப்படும் வரை அறிக்கை விடக் காத்திருந்தமையானது பொதுத் தமிழ் மனோநிலைக்கு எரிச்சலூட்டும் ஒன்றாகவே காணப்பட்டது. அதாவது, ஈழத்தமிழ் அரசியலில் மென்சக்திகள் போலத் தோன்றும் மிதவாதிகளைப் பலப்படுத்த எத்தனிக்கும் ஓர் அனைத்துலக நிகழ்ச்சி நிரலைப் பொறுத்த வரை கொலம் மக்ரேயின் படம் எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும்.

எனவே, கூட்டிக்கழித்துப் பார்த்தால், சனல் நாலும் கொலம் மக்ரேயும் ஈழத்தமிழ் அரசியலில் பின்வரும் விளைவுகளை ஏற்படுத்தி வருகிறார்கள். முதலாவது தமிழ் மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்ற அனைத்துலக அபிப்பிராயத்தை திரளச் செய்வது.

இரண்டாவது தமிழகத்தைக் கொந்தளிக்க வைத்து இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைக்கு சோதனைகளை ஏற்படுத்துவது. மூன்றாவது தமிழ் மிதவாதிகளின் கையாலாகாத் தனத்தை நிரூபிப்பது.

இம்மூன்று விளைவுகளையும் தொகுத்துக் கூறின் அது அரசாங்கத்தை வளைக்க நினைக்கும் ஓர் அனைத்தலக நிகழ்ச்சி நிரலைவிட அரசாங்கத்தை முறிக்க நினைக்கும் நிகழ்ச்சி நிரலுக்கே கிட்டவாகக் காணப்படுகிறது.

ஆனால், காலத்துக்குக் காலம் புதுப்பிக்கப்பட்டுவரும் தமிழ்க் கோபமானது ஒரு வெகுசன சக்தியாக உருத்திரட்டப்படாத ஒரு வெற்றிடத்தில்... தாயகம், புலம், தமிழகம் மூன்றையும் ஒரே கோட்டில் இணைக்கும் பொதுவான நிகழ்ச்சி நிரல் எதுவும் தமிழ் தரப்பில் இல்லாத ஒரு வெற்றிடத்தில்... அவ்வப்போது துண்டப்படும் தமிழ்க் கோபமானது அவ்வப்போது பொங்கி வடியும் ஒரு சோடாக் காஸ் போலாகிவிடுமா?

உலகத்தமிழ்ச் செய்திகள் நிலாந்தன்

# கொமன்வெல்த் மாநாடு: பொல்லைக் கொடுத்து வாங்கிய அடி

பொல்லைக் கொடுத்து அடி வாங்கியது போல என்று கூறுவது போலத் தான், கொமன்வெல்த் மாநாட்டை நடத்தப் போய், இலங்கை அரசாங்கம் பல்வேறு சிக்கல்களில் மாட்டிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

2009இல் போர் முடிவுக்கு வந்த சில மாதங்களில் ரினிட்டாட் அன் டுபாகோ நாட்டில் நடந்த கொமன் வெல்த் மாநாட்டில், 23ஆவது கொமன் வெல்த் உச்சி மாநாட்டை கொழும்பில் நடத்த விருப்பம் தெரிவித்திருந்தது இலங்கை.

அப்போது,அது இலங்கைக்குப் பெரும் புகழையும், உலகளாவிய அந்தஸ்தையும் தேடித் தரும் என்றும், போரினாலும் தமிழர் பிரச்சினையாலும் சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள கறைகளை கழுவிவிடும் என்றும் கணக்குப் போட்டிருந்தது அரசாங்கம்.

அந்தக் கற்பனை, கொழும்பில் 23ஆவது கொமன்வெல்த் உச்சி மாநாடு கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் வரை நீடித்தது. ஆனால், கடந்த வெள்ளிக்கிழமைக்கு சில நாட்கள் முன்னதாகவே, இது ஒரு சிக்கலான நிலைக்குள் தம்மைத் தள்ளப் போகிறது என்ற உண்மை அரசாங்கத்துக்கு விளங்கி விட்டது.

கனடா எழுப்பிய போர்க்குரலும், இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் வருகைக்கு எழுந்த எதிர்ப்பும், இந்த மாநாடு சர்ச்சைக்குரியதாக மாறப் போகிறது என்ற சமிக்ஞையை வெளிப்படுத்தி விட்டது.

இலங்கை அரசாங்கம் போட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அப்பால், பிரித்தானியா செயற்படத் தொடங்கிய போது, கிட்டத்தட்ட ஒட்டுமொத்த கொமன்வெல்த் மாநாட்டின் பார்வையுமே அதன் மீது திரும்பி விட்டது.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைப் போலவே, பிரித்தானியப் பிரதமர் டேவிட் கெமரூனும், மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளினதும், ஊடகங்களினதும், புலம்பெயர் தமிழர்களினதும் கடுமையான அழுத்தங்களுக்கு உள்ளாகியிருந்தார். ஆனால், மாநாட்டைப் புறக்கணிக்கும் அழைப்புகளை உறுதியாக நிராகரித்து விட்ட டேவிட் கமரூன், தனது பயணத்தை கொமன்வெல்த் மாநாட்டுக்கான பயணமாகவோ அல்லதுஇலங்கையின் எழிலைத் தரிசிப்பதற்கான ஒரு சுற்றுலாப் பயணமாகவோ கருதாமல், இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதற்கான ஒரு கருவியாக மாற்றிக் கொண்டார்.

அவரது அந்த முடிவும், தற்துணிவும், இன்று பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனை, உலகெங்கும் உள்ள தமிழர்கள் மத்தியில் ஓர் உயர்ந்த இடத்தில் வைத்துப் பார்க்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, தமிழ்நாட்டில் உள்ள முக்கிய அரசியல்வாதிகளால், டேவிட் கமரூன் ஒரு ஹீரோவாகவே போற்றப்பட்டிருக்கிறார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கை வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்த தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் - இலங்கையில் கொமன்வெல்த் மாநாடு நடத்தப் படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்த தமிழ் நாட்டு அரசியல் தலைவர்கள்- டேவிட் கமரூனின் பயணத்தை ஆகா ஓகோ என்று பாராட்டுகிறார்கள், கொண்டாடுகிறார்கள். அதற்குக் காரணம், டேவிட் கமரூன் - கொமன்வெல்த் மாநாட்டை பயன்படுத்திக் கொண்ட விதமும், அதற்காக பிரித்தானிய வகுத்த வியூகமும் தான்.

போர்க்குற்றங்கள் உள்ளிட்ட மனிதஉரிமை மீறல்கள் குறித்து நான்கு மாதங்களுக்குள் - அதாவது வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர், விசாரணை நடத்தத் தவறினால், சர்வதேச விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கப்படும் என்ற டேவிட் கமரூனின் எச்சரிக்கை, ஒட்டுமொத்த கொமன்வெல்த் மாநாட்டையுமே, புதிய தளத்துக்குள் கொண்டு போய் விட்டது.

அதாவது கொமன்வெல்த் மாநாட்டின் பிரதான கருப்பொருள் எதுவாக இருந்தாலும், மாநாட்டு அரங்கங்களுக்குள் பேசப்பட்ட விடயங்கள் எதுவாக இருந்தாலும், இலங்கையின் மனிதஉரிமை மீறல் விவகாரமே உலகளாவிய பேச்சுக்குரிய விவகாரமாக மாறியது.

இந்த மாநாட்டுக் கால கட்டத்தில், உலகளாவிய ஊடகங்கள் அனைத்துமே இதைப் பற்றித் தான் விவாதித்தன. எழுதிக் குவித்தன.

கொமன்வெல்த் மாநாட்டின் அடிப்படை அம்சங்களில், இருதரப்பு பேச்சுக்கள், வர்த்தக இணக்கப்பாடுகள், தலைவர்களின் சந்திப்புகள், மாநாடு நடத்தப்படும் நாட்டின் எழில், மாநாட்டுக்கான ஏற்பாடுகள் குறித்தெல்லாம், விவாதிப்பதில் உலகளாவிய ஊடகங்கள் கவனம் செலுத்தவில்லை.

அதற்கு மாறாக, இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்தும், இந்த மீறல்கள் பற்றிய விசாரணைகள் நடத்தப்படாதது குறித்தும், போருக்குப் பின்னர் தமிழர்கள் எதிர்கொள்ளும், ஊடகங்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் குறித்தும், பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனின் கருத்துகள் குறித்தும், கனேடியப் பிரதமர் ஸ்டீபன் ஹாப்பரின் புறக்கணிப்புக் குறித்தும், இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் வராதது குறித்தும், மொறிசியஸ் பிரதமரின் நவீன் ராம்கூலமின் புறக்கணிப்புக் குறித்துமே ஊடகங்கள் கவனம் செலுத்தின.

போர் முடிவுக்கு வந்த பின்னர், கடந்த நான்கரை ஆண்டுகளில், ஊடகங்களில் இலங்கை இந்தளவுக்கு முக்கியத்துவப்படுத்தப்பட்டு முதன்மைப்படுத்தப்பட்டு விமர்சிக்கப்பட்டது இதுவே முதல் முறை எனலாம்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கைக்கு எதிராக இரண்டு தீர்மானங்கள் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட போது இலங்கையின் மனிதஉரிமைகள்

தொடரும்.....

சஞ்சயன்

(நன்றி தமிழ்மிரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடைதிறந்த வெள்ளமாக 'மடை'

## கிராமியக் கலைப் பெருவிழா

தொடர்ச்சி

மூன்றாவது அரங்கேற்றுக் களரியாகும். இதற்குரிய கட்டுமானம் மிகவும் வித்தியாசமானது. இது கூத்துப் பழகிய இடத்திலோ அல்லது மக்கள் கூடும் பொது இடத்திலோ அல்லது ஊர்க்கோவில் வெளியிலோ மிக நேர்த்தியாக அமைக்கப்படும். களரி கட்டி பரீட்சயமான மூத்த கலைஞர்கள் இதனைக் கட்டுவர். அத்தோடு



இளைஞர்களும் சேர்ந்து கட்டும்போது அதனைக் கட்டுவதற்குரிய கற்றல் வெளியைப் பெறுகின்றனர். களரி அமைப்பு ஈழத்தில் வெவ்வேறு வடிவில் திகழ்ந்தாலும் பொதுவான கட்டுமான முறைமையே இங்கு நோக்கப் படுகின்றது. அதிக செலவின்றி மிகவும் நேர்த்தியாகவும் அதே நேரம் பிரமாண்டமானதாகவும் இது அமைந் திருக்கும்.

அரங்கேற்றுக் களரியில் சுற்றி வர வட்டமாக 7-9 கம்பு நடப்படும். நிலத்தில் இருந்து ஒன்று தொடக்கம் ஒன்றரை அடி உயர்த்தப்பட்டிருக்கும். உயர்த்தப்பட்ட பகுதியில் மண் வெளியில் செல்லாத வண்ணம் வரிச்சிக் கம்புடன் இணைத்து கிடுகுகளால் சுற்றிக் கட்டபப்பட்டிருக்கும். கூத்தின் ஆட்டக் கோலங்களுக்கு ஏற்ப அதன் விட்டத் தைக் கூட்டிக் குறைப்பர். களரியின் நடிப்பிடம் (Acting Area) போர்க்கள ஆட்டங்கள் நிறைந்த கூத்துக்களில் ஓரளவு பெரிதாக அமைக்கப்படும்.சுற்றி நாட்டப பட்ட ஒவ்வொரு கம்பின் அரைப் பகுதிக்குக் கீழாக வர்ணச்



சேலைகளால் குஞ்சம் பிடித்து மேலிருந்துகீழாக சுற்றிக் கப்படும் அதன் மேற்பகுதியில் குருத்துக்கள் சேர்த்து மிக அழகாக அலங்கரிக்கப் படும். சுற்றிக் கட்டப்பட்ட கம்புகளை இணைத்து கிட்டத்தட்ட எட்டரை அடி உயரத்தில் மெல்லிய கம்புகளால் வரிச்சுப் பிடிக்கப்படும். அந்த வரிச்சில் சீலைகளின் ஒவ்வொரு பக்கத்தையும் ஊசியால் குத்திபின்னர் ஒவ்வொரு சீலையையும் சேர்த்து ஊசியால் குத்துதல் வேண்டும். அதனைத் தொடர்ந்து எல்லாச் சீலையையும் இணைத்து முடிச்சுப் போட்டு அதைப் பெரிய கயிற்றினா ல் கட்டி உயர்த்தி ஒரு அழகாககுடை வடிவில் கட்டப் படும். கட்டும்போதுஇரு மருங்கிலும் இரண்டு கம்பு நாட்டி ஒரு கப்பியில் சீலைகளைச் சேர்த்துக் கட்டிய கயிற்றை இட்டு இழுக்கும்போது உயர்ந்து கொடுக்கும். பின்னர் அளவிற்கேற்ப நேர்த்தியாக்கப்படும். இந்த நேர்த்தியை மேலும் கொண்டு வருவதற்கு கயிற்றினால் பின்னப்பட்ட வலையைப் பயன்படுத்தும் முறையும் ஆரம்பத்தில் காணப்பட்டது. சீலைகளைக் கட்டுவதற்கு முன்னர் உட்புறமாக இவ்வலை கட்டப் படும்.மேற்



பகுதியில் உள்ள வரிச்சியைச் சுற்றி சீலையை இரண்டாக மடித்து சுருக்கிச் சுருக்கி மிகவும் நேர்த்தி யாகஅழகு படுத்துதல் இடம் பெறும். வடமோடிக் கூத்து, தென்மோடிக் கூத்திற்கு என ஒரு களரியா னாலும் கூத்தர் உள் நுழையும் வாயில் வடமோடியில் வடக்குத் திசையிலும், தென்மோடியில் தெற்கு திசையிலும் வைக்கப்படும் மரபும் உண்டு. அந்த வாயிலில் தமிழர் பாரம்பரியத்தை வெளிக் கொணரக் கூடியவாறு அழகான தோரணம் ஒன்றும் அமைக்கப்பட்டு கட்டப்படும்.

**விரிவுரையாளர்**
**திரு சு.சந்திரகுமார்.**

தொடரும்...............

## எத்தனை காலம் தான்......?

பசு புல்லை தின்று பாலைத் தருகிறது ஆனால் பாம்பு பாலைக் குடித்து விஷத்தைத்தருகிறது. நாம் வாழும் சமூகத்திலும் அவ்வாறே நல்லவைகளும் இடம் பெறுகின்றன. தீமைகலும் இடம் பெறுகின்றன. எது என்னவாக இருந்தாலும் மானிடராக பிறந்த நாம் எதற்கும் முகம் கொடுக்க நிற்பந்திக்கப்பட்டுள்ளோம்.

நுவரேலியா மாவட்டத்தைச் சார்ந்த கந்தப்பொல பிரதேசம் இலங்கையில் ஆகக்கூடிய குளிரான பிரதேசமாகும். பிரபல முஸ்லீம் வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான பாரிய வெதுப் பகம் ஒன்று அங்கு மிக சிறப்பாக இயங்கிவருகிறது. அதன் கீழ் பல கிளைகள் சிற்றுாண்டிச்சாலைகளாக நுவரேலியா மாவட்டம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ளன. வேலையற்ற பல இளைஞர் யுவதிகலுக்கு அந்த வெதுப் பகம் கை கொடுத்து உதவி வருவதை எவரும் மறந்து விடமுடியாது. கந்தப் பொல பிரதேசத்தில் இயங்கி வரும் குறித்த வெதுப்பகத்திற்குரிய சிற்றுா ண்டிச்சாலைக்கு பொறுப்பாகவும் விற்ப ணையாளராகவும் நியமிக்கப்பட்ட அந்த அழகான இளம் பெண் சுமார் 25வயது மதிக்கத்தக்கவர் பொருளாதார கஷ்ர த்தின் நிமித்தம் அவள் அங்கு பணி யாற்ற நிற்பந்திக்கப்பட்டுள்ளாள். இவள் பெற்றோருக்கு ஒரே ஒரு பிள்ளை அது வும் செல்லப்பிள்ளை. தகப்பனாருக்கு நிரந்தர தொழிலொன்றும் இல்லா ததினால் அவர் அங்குள்ள கால்நடை பண்ணைகளுக்கு புல்லு வெட்டிக் கொடுத்து நாட்கூலியை பெற்றுக் கொள்வார்.

மேலும் அவரின் நாளாந்த வரு மானம் குடும்பச் செலவுக்கு போதாமை காரணமாக அவரின் மகளும் உழைக்க வேண்டிய நிற்பந்தத்திற்குள்ளானாள். இந்தக் காலத்து இளசுகளை பற்றி இனி கூறவாவேண்டும். குறிப்பாக இளம் யுவதிகளை எடுத்துக் கொண்டால் தங்களை தாம் அலங்காரப்படுத்து வதிலே அவர்கள் பெரும் அக்கறை காட்டுவார்கள். அதனால் பெறுமதியான காலத்தின் முக்கால்வாசி அதற்காக கழிந்துவிடும். அது மாத்திரமா?அதற்கு பயன்படுத்தும் அழகு சாதானங்க ளுக்கான செலவுக்கு உழைப்பில் ஒரு தொகைப்பணத்தை வீணே செலவு செய்வார்கள் அதனால் கையில் மாதம் மிஞ்சுவது மிக சொற்ப தொகையே. அந்த அழகு சாதனச் செலவை சமாளிக் கவே இன்று பலர் வேலைக்குச் செல்கின்றனர். குறித்த சிற்றுாண்டிச்சாலையில் பணிபுரியும் அந்த இளம் பெண்ணும் கூட தன்னை அலங்கரிப்பதிலே முன்நிற்கதயங்கு வதில்லை அதற்காக அவள் அதிக செலவையும் செய்வாள்.

நேரத்திற்கு நேரம் நவநாகரீக மான ஆடைகளை அணிவதில் அவளு க்குத் தனி விரும்பம். அவள் முகத்திற்கு உபயோகிக்கும் அழகுக்கலைகளின் தரங்கள் மிக விலை கூடியதாகவே இருக்கும். பெற்றோர் அவளின் விருப் பத்திற்கு எதிராக என்றுமே செயற்படு வதில்லை அதற்கு காரணம் அவள் அவர்களுக்கு ஒரு செல்லப்பிள்ளையாக இருப்பதே.

காலை ஆறுமணிக்கு சிற்றுாண் டிச்சாலை திறக்கப்பட்டு பகல் பன்னி ரண்டு மணிக்கு மூடப்படும். மீண்டும் நாலுமணிக்கு திறக்கப்பட்டு இரவு எட்டுமணிக்குமூடப்படும்வாடிக்கையாளர் அதிகரிக்கும் நாட்களில் அவளின்தாயார் அவலுக்குஉதவியாகஅங்கு பணிபுரிவார். அவள் அப்பகுதியில் சகலவருடனும் மிக சகஜமாக பழகத் தவறுவதில்லை. அவ்வாறே தனது தொழிலை நேர்மை யாகவும், திறமையாகவும், நடாத்தி வருவதால் அந்த வெதுப்பக உரிமை யாளர் கூட அவளை பல முறை பாராட் டியுள்ளார். மேலும் அவருக்கு அந்த சிற்றுாண்டிச்சாலை தொடர்பாக பொது மக்களிடம் இருந்து எந்தவித புகார்காரும் இதுவரை கிடைக்காததே அவரின் பாராட்டுக்குக் காரணமாகும்.

அயல் கிராமத்தில் இருந்து பலர் அந்த சிற்றுாண்டிச்சாலைக்கு வந்து தேவையானவற்றை கொள்வனவு செய் வார்கள். அதனால் உரிமையாளருக்கு அதிக இலாபமும் கிடைக்கத் தவறுவ தில்லை. அவள் அங்கு கமிஷன் அடிப் படையில் பணியாற்றுவதால் விற்பனை அதிகரிக்க, அதிகரிகக் அவளுடைய கொடுப்பனவும் அதிகரித்துக் கொண்டே போனது. பலர் அங்கு வந்து போனா லும் அயல் கிராமத்தை சார்ந்த இளை ஞன் ஒருவனும் அடிக்கடி அங்கு வந்து போவான். அவள் அவனுடன் நட்பாக பழக்கத்தை ஏற்படுத்தினாலும் அவனிடம் ஒரு மாற்றத்தை அவளால் அவதானிக் கூடியதாக இருந்தது.

ஒரு நாள் அவள் அங்கு தனி யாக இருந்த வேளையில் அந்த இளை ஞன் அவளை சந்தித்தான். வழமையாக உரையாடுவது போல் உரையாடி தனது அடிமனதில் ஆழமாக பதித்துவைத்த விடயத்தினை அவளிடம் சமர்ப்பணம் செய்தான். அவனின் அந்த விடயத்தைக் கேட்டு அவள் ஒரு கனம் அதிர்ந்து போனாள்: ஏற்கனவே அவனது நடவடிக் கைகள் கதை பேச்சுக்கள் என்பன தொடர்பில் சிறு சிறு சந்தேகங்கள் இருந் தாலும் அவள் அதை வெளிகாட்ட முயற் சிக்கவில்லை. எனக்கு உங்களை மிகவும் பிடிச்சு போச்சு நான் உங்களை திரு மணம் செய்ய விரும்புகிறேன் நீங்க என்ன.... சொல்லுறீங்க....... என்று விழுங்கி விழுங்கி... பேசினாள் அந்த இளைஞன். திடிரென அவன் கேட்ட கேள்வியினால் அவள் ஒரு கணம் அதிர்ந்து போனது மல்லாமல் ஊமையாகியும் விட்டாள். எப்படியும் அவனின் கேள்விக்கு விடை சொல்லித்தானே ஆகவேண்டும். அவ ளும் ஒருவாறு துணிவை வரவழை த்துக் கொண்டு.

என் கையில் ஒன்றுமில்ல, அப்பா..அம்மாதான் முடிவு செய்ய வேனும் விருப்பமென்றால் அப்பா அம்மாவோட கதையுங்க என்றாள் மிக அமைதியாக. ஓரிரு நாட்களுக்குப் பிறர்அவன்,அவள் கூறிய பிரகாரம் அவளின் பெற்றோருடன் பேசி எப்படி யோ சம்மத த்தை அவன் பெற்றுக் கொண்டான். பெற்றோர் தம் விருப்பத்தை தெரிவித் ததால் அவளும் தனது சம்மதத்தை தெரிவிக்க தாமதிக்க வில்லை

அக்குடும்பம் மிகவும் வறிய நிலையில் வாழ்ந்து கொண்டு இருநத் தால், பதிவுத் திருமணம் மிக எளிமை யாக காதோடு காதுவைத்த மாதிரி நிறைவு பெற்றது. ஆனால் அவனின் பெற்றோருக்கு அப் பதிவுத் திருமண விடயம் தெரியாது. ஆனால் அவனின் கிராமத்தில் அவனைப்பற்றி அவளின் பெற்றோர் விசாரித்த பொழுது அவனை மிக நல்வனென்றே சகலரும் கூறி இருந்தனர். அவர்களும் அவசரத்தின் நிமிர்த்தம் அவன்து .பெற் றோரை இவ்விடயம் தொடர்பாக அனுகவில்லை.

அதனால் எதற்கும் துணிந்து அந்த பதிவுத்திருமணத்தை அவளின் பெற்றோர் இரகசியமாக நடா த்தி வைத்தனர். ஒருவருடம் கழிந்தும் அவன் அவளை முறைப்படி தாலிகட்டி மனைவியாக்கி தனிக்குடித்தனம் செல்ல எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை.

அது தொடர்பில் அவளின் பெற்றோருக்கு, அவளுக்கும், பெரும் சந்தேகம் ஏற்பட்டது. அது மாத்திரமல்ல அவனது தொடர்புகளும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வந்தது. கையடக்க தொலைபேசி தொடர்புகளும் அடியோடு நாளடைவில் நின்று விட்டது. அவன் அவளதுஇணைப்பை தொலைபே சியில் அடிக்கடி துண்டித்துக் கொண்டு வந்தததுமல்லாமல் அதன் இலக்கத்தை யும் மாற்றிக் கொண்டான்.

அவன் எப்படியும் அவளை கைவிடுவதிலேலை நோக்கமாக இருந் தான் ஒரு நாளும் அவளை சந்தித்து பேசுவதே இல்லை. ஒரு வருட காலம் கடந்தும் திருமணத்தைப்பற்றி எந்த நடவடிக்கை யும் எடுக்காமல் அவன் தட்டிக் கழித்ததினால் அவள் நேரடியாக அவன் நடாத்திவரும் வீடியோ சென்டருக்கு விபரம் அறியச் சென்றாள்.

நான் உங்களோடு கொஞ்சம் பேச வேண்டும். தயவு செய்து கொஞ்சம் வெளியே வாங்க என்றாள் அவன் வெளியே வந்து அவளோடு அதிக நேரம் விவாதித்து விட்டு கூறினான் இப்ப எனக்கு உன்ன கல்யாணம் செய்ய இயலாது. நான் உனக்கு தேவை என்றால் ஆறு வருடம் காத்திரு இப்ப எனக்கு வசதி இல்லை என்று கடுமை யாக கூறிவிட்டு அங்கிருந்து சென்று விட்டான். அவள் அவ்விடத்திலே ஒரு தீர்க்கமான முடிவை எடுத்துவிட்டு அங்கிருந்து வீடு திரும்பினாள். அவன் அடுத்த நாள் அவளை சந்தித்து ஒரு படிவத்தை அவளிடம் கதைத்து இதில் கையெழுத்துவை உனக்கும் பிரச்சினை இல்லை எனக்கும் பிரச்சினை இல்லை என்றான்.

அவள் அதில் கையெழுத்து வைக்க விரும்பவில்லை அவள் வந்த வழியே திரும்பிப் போனாள் தற்பொழுது அவன் ஒரு அழகான, மிகவும் வசதியான பெண்ணை காதலித்துக் கொண்டிருக்கிறான். அவளை திருமணம் செய்வதற்காககவே முன்னையபதிவுத் திருமணத்தை இரத்துச் செய்யும் படிவத்தில் ஒப்பம் வேண்டுவதற்கு அவன் முயற்சி செய்கிறான் என்பதனை அவள் நன்கு அறிந்து கொண்டாள். "பிள்ள நீ ஒன்றுக்கும் யோசிக்காத, அவன் தன்ர புதுக் காதலியை எப்படி பதிவுத் திருமணம் செய்கிறானோ அதை மாத்திரம் எனக்குச் சொல்லு அவனை ஏழு வருடம் கம்பி எண்ண வைக்கிறன் என்றார்". என்றார்அப்பகுதிபிரபல சட்ட த்தரணியொருவர். காரணம் சட்டப் படி விவாகரத்து இன்றி இன்னு மொரு திருமணத்தை செய் வதற்கு ஏற்பாடுகள் இல்லை

**- துட்டகைமுனு -**

**...நாட்டு நடப்பு...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறங்களற்ற கனவுகள்

சிறுகதை

அது மிகவும் அழகானது. பல்வேறு நிறங்கள். பல்வேறு வடிவங்கள். "காலுக்கு மெத்து மெத் தெண்டு.. வளந்த ஆக்கள் மெல்லிசா போடுவினம்.. கட்டப்புட்டுக்கள் மொத்தமாப் போடுவினம்.. ஆனா ஒரு கெட்ட பழக்கம்.. அதுக்கு பொருத்த மில்லாதத அல்லாட்டி புதுசா போட்டால் கடிச்சுப் போடும்" "ஓம் அது கடிச்சுப் போடும் ..." "அம்மா கடிச்சுப்போட்டுது... அம்மா அம்மா கடிச்சுப்போட்டுது..."ராம் பாயிலிருந்து இரண்டு காலையும் உயரத்தூக்கிய படியே "கடிச்சுப் போட்டுது கடிச்சுப்போட்டுது" என்று கத்தினான்.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தளவில் இது பொதுவான விடயம். படுக்கையில் பலபேர் கண்ணுக்குத் தெரியாத ஜந்துக்களால் கடிக்கப்படுவதும் பொது வைத்திய சாலையில் மரணமாவதும் .. நிரம்பப் பொதுவான விடயம்.

ராம் காலைச் சடாரெனத் தூக்கியதால் தலை லேசாக மேலே போய் தம்பியின் வயிற்றில் முட்டியது. அவன் திடீரென சுருண்டு எழும்பித் தட்டுத்தடுமாறிய தனதுகையால் தரையைத் தடவி தலை முழுவதும் சரத்தால் போர்த்திப் படுத்திருந்த தம்பியய்யாவின் சரத்தை இழுத்து விட்டான். அருவி வெட்டிய களைப்பில் அசந்திருந்த தம்பிஐயா அதிர்ச்சியில் காலால் எட்டியுதைக்க குப்பி விளக்கின் எண்ணெய் விசாலத்தின் முகம் மீது முழுதாய் தெறித்தது. நாசமாப் போனதுகள்.. நிம்மதியாப் படுக்கவும் ஏலாது.. விசாலம் தனது பொதுவான பல்லவியைப் பாட, தம்பியய்யா குப்பி விளக்கைத் தடவி நெருப்பெட்டியால் கொழுத்தினார். ராம் கத்திக்கொண்டே இருந்தான்.

தம்பி ராம் என்ன கடிச்சுப் போட்டுதெண்டு கத்தினனி. எங்க காட்டு பாப்பம். உலுக்கி எழுப்பப்பட்ட ராம் சம்பவத்திற்கும் தனக்கும் தொடர்பேயில்லாமல் தனது வலது காலை தடவிப்பார்த்தபடி எல்லோரையும் விழித்துப் பார்த்தான். காலில் எதுவித தடயங்களும் தட்டுப்படாததால் தான் கனவு கண்டது அப்பட்டமாய் அவனுக்கு புரிந்து போனது. "அப்பா அண்ணருக்குச் செருப்புக் கனவு.. .. பாழாப்போன அந்தச் செருப்பையொருக்கா வாங்கிக் குடுத்தாப் பிறகுதான் நாங்கள் நிம்மதியா நித்திர கொள்ளலாம்.. .."

தம்பி அலுத்துக்கொண்டான். அந்த அலுப்பில் அண்ணாவிற்கு எதுவும் உண்மையிலேயேகடித்து விடவில்லையென்ற ஒரு திருப்தியும் ஏதோ ஒரு இயலாமையும் மெலிதாய் படர்ந்திருந்ததுடன் அந்த நேரத்தின் கனத்தையும் அமைதியையும் குறைத்து எல்லோரையும் மீண்டும் அருகருகே தூங்க வழிசமைத்தது.

எல்லோருமே படுத்துக் கொண்டது உண்மைதான் ஆனால் ராமினால் மட்டும் தூங்க முடியவில்லை. அவனிற்கு எதுவும் பெரிய ஆசையில்லை. ஒரு சோடி அழகான "சாண்டில்ஸ்" செருப்பு. "ஒரு எண்ணூறு தொள்ளாயிரம் வரும். ஆனா அப்பாட்ட கேக்க ஏலுமே. நானும் தம்பியும் படிக்கிறம். அம்மாவுக்கு லேசான வருத் தங்கள் இருக்கு. அப்பாட வேல கூலி. நல்லா வயசும் போட்டுது. இந்த வருசம் நான் ஓ.எல் பரீட்சை எடுக்கும் வரைக்கும் அவர் படிப்பிக்கிறதே பெரிய விசயம். உடுப்பு, சாப்பாடு, மருந்து, நாசமாப் போன டியூசன் இதுக்கெல்லாத்துக்கும் பிறகு சாண்டில்ஸ் எப்பிடி நான்



அப்பரிட்ட கேக்கிறது.

ஓ.எல் க்குப் பிறகு நான் உழைப்பன் தானே அப்ப பாப்பம்" தூக்கம் தொலைந்த இரவுகளில் ராம் இதைத்தான் அடிக்கடி நினைத்துக் கொள்வான். "ஓ.எல் க்குப்பிறகு உழைப்பு, முதல் சம்பளத்தில நல்ல செருப்பு" அவன் நிம்மதியாய் தூங்கத் தொடங்கினான். கனவுகளில் அவன் கால் சாண்டில்ஸ் அணிந் திருந்தது.

ஓ.எல் பரீட்சை முடிந்தது. ராம் வேலைக்குப் போக ஆசைப்பட்டான். ஆனால் கூலி வேலைக்கல்ல. ராம்மின் வீட்டிலிருந்து நான்காவது வீட்டில் வீடியோ, போட்டோ படம் எடுக்கும் ஜெகன் தனக்கு ஒரு உதவியாளர் தேவை என கூறி ராமை தனது உதவியாளராக்கிக் கொண்டான்.

'ஐ...யா....... வேலை கிடைச்சிட்டுது. முதல் மாசம் முடியச் சம்பளம், உடனே ஒரு செருப்பு. ஆனா ஜெகன் அண்ணா சம்பளத்தைப் பற்றிச் சொல்லேல்ல. எவ்வளவு தருவார். எனக்கு? ஆக குறைஞ்சது ஆயிரம் ரூவா வேணும். முப்பது நாளும் நான் வேலைக்குப் போனனென்டால் ஒரு நாளுக்கு முப்பத்தஞ்சு ரூவாயாவது ஆக குறைஞ்சு தரோணும் செருப்பு வாங்க. தருவாரோ". '

'டேய் மடையா சாகப் போறியே நடுறோட்டில கனவு கண்டுகொண்டு வாற" சைக்கிளில் வந்த ஒருவன் ராமை உலகிற்கு இழுத்துவந்தான்.

"சொறி யண்ண"

"இந்த ஒரு இங்கிலிஸ் காணும் செய்யிறதெல்லாம் செய்துபோட்டுத் தப்பிறதுக்கு" சைக்கிள்காரனுக்கு எதன் மீது கோபம் என்று தெரியவில்லை.

"நான் எப்ப செருப்புக் கனவு கண்டாலும் மற்றவைக்குத்தான் கரச்சல். இனி செருப்புக் கனவு காணக்கூடாது. ஏன் நான் கனவு காணோணும்? அடுத்த மாசம் வாங்கிப் போடுவன். முப்பதுநாள், எண்ணி முப்ப[illegible] முகத்தை முழுவதுமாய்ப் பற்றிக் கொள்ள ராம் மெல்லிய புன்னகையுடன் முதல் நாள் வேலை முடிந்து வீட்டிற்கு வந்துசேர்ந்தான்.

"ராம்.. உமக்கு மாதம் ஆயிரத்து ஐநூறு றூவா சம்பளம் ஆனா வேலைக்கு வராட்டி ஒரு நாளைக்கு ஐம்பது ரூவா தரமாட்டன்."

கந்தசாமி கோயில் முருகனுக்கு பாலும் தயிரும் பஞ்சாமிர்தமும் அபிசேகம் செய்யப்படும் போதெல்லாம் முருகனுக்கு எப்படியிருக்கும் என ராம் நினைத்ததுண்டு. அவனுக்கு ஜெகனின் வார்த்தைகள் காது வழியே புகுந்து அபிசேக முருகனின் அனுபவத்தைத் தந்தது.

"முதல் மாசம் முதல் சம்பளத்தில எனக்கு சாண்டில்ஸ்" "என்ன சம்பளம் காணாதோ பேசாம இருக்கிறாய்" "இல்லையண்ண வடிவாக்காணும்" "ஆனா முதல் மாசம் ரெயினிங், சம்பளம் தர மாட்டன், ஒழுங்கா விசயம் பிடிச்சாப் பிறகுதான் சம்பளம் சரியோ" "ஓம் அண்ணா" "முதல் மாசம் முதல் சம்பளத்தில் இல்ல, இரண்டாம் மாசம் முதல் சம்பளத்தில் எனக்கு சாண்டில்ஸ்" மெல்ல எழும்பிய ஏமாற்ற உணர்வுகளை அடக்கிக் கொள்ள ராம் பெரும் பிரயத்தனப்பட்டான்.

முதலில் வீடியோ படம் எடுக்கலைட் பிடிக்கிறது, சூம் செட் பண்ணுவது, வெளிச்ச அளவிற்கு ஏற்ப சட்டர் செட்பண்ணுவது, பிலிம் ரோல் லோட்பண்ணுவது, நாட்கள் உருள உருள ராம் படப்பிடிப்பின் ஆரம்ப விடயங்களைக் கற்றுக் கொண்டான்.

'ராம் இந்தா கெமரா 36 சொட் பிலிம் ரோலை லோட்பண்ணிக்கொண்டு போய் உனக்கு விருப்பமானதெல்லாத்தையும் படம் எடுத்துக்கொண்டு வா பாப்பம்" நகரம், காடு குளம் கோயில் எல்லா இடமும் ராம் கமெராவுடன் திரிந்து திரிந்து படங்களை எடுத்தான்.

"என்ன பதினொரு படம் விதம் விதமா சாண்டில்ஸ் போட்ட ஆக்களின்ற காலை படம் பிடிச்சிருக்கிறாய் எனக்கு விளங்கேல்ல." "ஏதோ ஒரு வித்தியாசமாத்தான் இருக்கு எண்டாலும் நல்லா எடுத்திருக்கிறாய். கொஞ்சம் இர[illegible]வு தானே இருந்தாத்தான் படம் சரியா எடுக்க ஏலும். போகப்போக மெருகூட்டலாம் என்னோட இருந்து.. சரி.. சரி.. எல்லாம் சரியாப் போகும்."

"என்னயறியாமலே நான் கனவு கண்டிட்டன் போல இருக்கு சாண்டில்ஸ் போட்ட காலுகள் எப்ப நான் படம் எடுத்தனென்டு தெரியாமக் கிடக்கு. ஜெகனண்ணயிக்கு விளங்கேல்ல நான் காலப் படம் எடுக்கேல்ல எண்டு"

சிரித்த படியே ராம் வீட்டிற்குத் திரும்பினான். "என்ன மோனே வேலைக்குப் போகத் தொடங்கினாப் பிறகு எப்பவும் சிரிச்சுக்கொண்டே வீட்டை வராய். எனக்கும் சந்தோசமாய்தான் கிடக்கு நீ மூத்தவன் உழைக்கத் தொடங்கீட்டயெண்டால் எங்கட பாரமும் குறைஞ்சு போகும். தம்பியையும் நல்லாப் படிக்க வைப்பாயெல்லோ" ஏதோ மனதை உறுத்திற்று.

"அம்மா இப்பவும் ஒரே யொரு வீட்டுச் சட்டையோட இருக்கிறா நான் 9ம் வகுப்புப் படிக்கேக்கப் போட்டிருந்தது. அப்பரிட்ட மாத்திக் கட்ட நல்ல சரம் இல்ல, தம்பிக்கு ரண்டு சேட் காச்சட்டதானிருக்கு எனக்கும் அதே தான்". இரவு அம்மண உடலுடன் அழகான சாண்டில்ஸ் போட்ட பதினொரு பேர் அவனது கனவில் வந்தார்கள்.

"ஆர் ஆக்கள் கொஞ்சம் தெரிஞ்ச முகமாக் கிடக்குது. இங் கிதம் தெரியாததுகள் சட்டையப் போடாமல் சாண்டில்ஸ் போட்டாச் சரியோ, எனக்கு இவயளப் பிடிக்கயில்ல ஆனா தெரிஞ்ச முகமாக் கிடக்கே ஆரது.. அப்பாமாதிரிக் கிடக்கு.. ஓம் அப்பாவே தான்.. ஐயோ அவருக்குப் பின்னால் அம்மாவும் தம்பியும் அம்மணமா .. சாண்டில்ஸ்சோட .. முருகா.." கத்திய படியே ராம் திடுக்கிட்டு எழும்பினான். ஆனால் எவர்மீதும் அவன் முட்டுப் படவேயில்லை.

அவன் வேலைக்குப் போவதால் நிம்மதியாகத் தூங்க வேண்டும் என்பதால் அவர்கள் எல்லோரும் அவனை விட்டு சிறிது தள்ளிப் படுத்திருந்தார்கள்.

"ராம் இந்தாரும் உம்மட சம்பளம் நல்லா வேலை செய்யிறீர் தொடர்ந்து இப்பிடியே வேலை செய்தீரெண்டால் சம்பளம் கூடும்."

"அம்மா அண்ணா பெரிய பாக்கோட வாரா.......ர்" பெரிய சத்தமெழுப்பியபடி தம்பி ஓடி வந்தான்.

அப்பாவும் அம்மாவும் வாசலில் வந்து நிற்க அதே பெருமிதமும் புன்னகையுடனும் ராம்.

"எல்லாருக்கும் உடுப்பு வாங்கிக் கொண்டந்தனான்"..........

அந்த இரவில் அவன் நிம்மதியாய் தூங்கினான். கனவுகளில் அவன் கால் சாண்டில்ஸ் அணிந் திருந்தது. எனினும் அது அவனது காலைக் கடிக்கவில்லை.

-மாயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உமக்குப் புண்ணியம் கிடைக்கட்டும்



ஜயா!
உங்கள் சுழல் விழுந்த
பேதெல்லாம் கைகொட்டி
ஆரவரித்திருந்த - இனம்
ஜயா....நாம்..

அன்றெம்
வெறும் வயிறோ
வேலியற்ற குமர்க்
குளிப்பிடமோ....
பூனை தூங்கும்
அடுப்பங்கரையோ....
பொருட்டேயல்ல... ஜயா...

நீர் சுழல் வீசி....வீசி....
இலக்கு வீழ்த்திப் - பூலோகப்
புத்தகத்தில் பெயர்
பதிய....
வேல்குத்திக் காவடியெடுத்த
பாமரம்.... நாம்
ஜயா...
நீங்கள் பேசும்
மொழியும்...பெயரும்
உங்களையும் எம்மையும்
பிணைத்திருந்ததாய்
எண்ணிய பேயர்
இனம்.. நாம்...
ஜயா!
உங்கள் புத்திக் கணக்கில்
முப்பது தாய்மாரின் கதறல் ஓர்
பொருட்டல்லவோ...
அது முன்னூறு ஆகினால்
செய்தியோ!
மூவாயிரம் ஆகினால் பொருட்டோ!
மூன்று லட்சமாயின் வரலாறோ....?
ஜயா!
இது வொன்றும்
மூன்று கோல் நட்ட
இலக்கல்லவே....

உயிர்...
ஜயா...உயிர்

பெண் பிரிந்தது பிணையைத்...
தாயோ...
பொன் எனப் பிரிந்தது பெற்றதை....
தந்தை தொலைத்தது தன்
கொள்ளிக்கான உயிரை....
குழந்தை தொலைத்தது தன்
எந்தையை - ஜயா.....
இலக்குகள் அல்ல - இவை
எம் உயிர்....

முப்பது ஓர் பொருட்டில்லையா
உமக்கு...
போம்...
எசமானர்களின் ஒழுகும்
சீழ் நக்கிச் சுவையும்....
பின் அதே வாயில் - உம்
புறங்கை நக்கும்... பிடியும்
பந்தை... சுழற்றி எறியும்....
மூன்று கோல் இலக்கை
வீழ்த்தும்... ஆனால்
ஒன்றைச் செய்யும்
எமக்காய்
எம் மொழி பேசுவதை
நிறுத்தியது போல்
உம் பெயரையும்
பெற்ற அப்பனதும் அம்மாவினதும்
பெயரையும் மாற்றிக் கொள்ளும்
உமக்கும்
புண்ணியங் கிடைக்கட்டும்.

மாயன்

## தமிழ் இறப்பிலியே?

புத்தகம் புத்தகமாய்- வாங்கியே
போரில் அழித்தேனே!
எத்தனை எத்தனையோ - நூல்களை
எண்ணிச் சலித்தேனே!

மேலும் வரைந்ததெலாம் பேரலை
மிதத்திக் கற்றுதுவே!
நாலும் அறிந்ததனால் ஆழியும்
நற்றமிழ் பெற்றதுவோ?

இன்னும் பயிலுகிறேன் தமிழும்
இன்பக்கடல் அலவோ?
என்னதான் போனாலும் தலையுள்
இருப்புப் போகலையே!

என்னென்ன பெற்றாலும் அவற்றில்
ஏதேதோ கற்றாலும்
இன்னும் தமிழ்க்கடலை நீந்தியே
ஏறலையே கரையில்?

அகவை போகிறதே வாழ்வெனும்
ஆயுள் முடிந்திடுமே?
இகம் அறிந்துவிடின் பிறகோ
எல்லாம் புதிதலவோ?

இவற்றை இங்கொருவர் இருந்தே
இயக்குகின்றாராமே?
அவர் தமிழ் அறிந்தால் ஜயகோ,
அழிக்க விழைவாரோ?

மாந்தர் மரபிருந்தால் தமிழும்
மாந்திடவிடாதிருக்கும்!
ஏந்தும் புதுநூலால் அறிவியில்
இன்னும் வளர்ந்திடலாம்!

ஏவுகனை மயத்தால் எதிர்நாள்
ஏதுமோர்கோள் கிடைக்கும்?
தாவுவான் ஓர் தமிழன் எனவே
தமிழ் இறப்பிலியே

**தாமரைத் தீவான்**
ஈச்சந்திவு கிண்ணியா

# கவிமுரசு

## என்னையும் தேடுவீர்கள்....!



அணில்களே!
கனிகளைக் கொண்டு நான்
கச்சிதமாய் இருந்த போது
கனிவோடு பேசி என் கனியோடு
மகிழ்ந்தீர்.....!

கிளிகளே!
கிளைகளை நீட்டி நான்
கதை பேச அழைத்த போது
ஜோடியாய் வந்தமர்ந்து கதைபேசிச்
சென்றீர்.....!

குயில்களே!
இன்முகம் கொண்டு நான்
இருக்க இடம் தந்த போது
இன்பமாய் குடியேறிகுழந்தைகளுடன்
வாழ்ந்தீர்.....!

காய்களும்,கனிகளும் இப்போது
இல்லைதான் என்ற போதும்
இன்முகத்துடன் அழைக்கிறேன்
அருகில்வர மறுக்கின்றீரே!
உமது தேவை முடிந்தனாலா?
என்னிடம் எதுவும் இல்லாததன்னாலா

என்னையும் தேடுவீர்கள்
இலையுதிர்காலம் கழிந்து
எனக்குமோர்
வசந்தகாலம் வரும் போது!

**ரஞ்சிதா நவரட்ணம்**
திருகோணமலை

## ஏனடி பெண்ணே?



தீபங்கள் மகிழ்ந்து பேசும்
தீபத்திருநாளில்
என்மனது
மட்டும்தான் தனியே
இருண்டுதான்
கிடந்த தென்ன?
நான்
உன்மீது கொண்ட
காதல்
கந்தன்மளிகை
கடைச்சரக்குபோல்
காலவாதிஆனதென்ன?
அதையும் நீதானே
கசக்கி எறிந்த
மாயமென்ன?
எனை
பொசுக்கிதானே
கொன்றதென்ன?
நான் ஆசையாக
கொண்ட காதல்
காசைபார்த்து
விட்டதென்ன?
வெளிநாட்டு
மாப்பிள்ளையின்
மோகம் கொண்டு
நின்ற தென்ன?
நேற்றுவரை
இரு மனங்கள்
சேர்வது தான்
உண்மைக்காதல்
என்றிருந்தேன்
இன்று உன்னால்
மனங்கள்
சேர்வதுதான்
இன்றைய காதல்
என
புரிந்தேன்....

**ச. திருச்செந்தூரன்**
அன்புவழியூர் திருகோணமலை

## அப்துல்கலாம் என்ன சொன்னாரு



மட்டக்களப்பு புனித மிக்கேல் தேசிய பாடசாலை மாணவன் கொண்ஸ்ரன் கிசான் கதை திரைக்கதை வசனம் எழுதி இயக்கிய "அப்துல் கலாம் என்ன சொன்னாரு" என்னும் குறும்திரைப்படத்தின் வெளியீட்டு விழா நவம்பர் 17ம் திகதி ஞாயிறு பி.ப 4.30 மணிக்கு மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ மண்டபத்தில் இடம்பெற்றது.

இவர் ஏற்கனவே சல்லி, வண்ண ஓவியம் என அதிகம் பேசப்பட்ட குறும்திரைப்படங்களை எழுதி இயக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்படத்திற்கான ஒளிப்பதிவை விபுஅவர்களும் படத்திற்கான இசையை ஜனனி அவர்களும் படத்தொகுப்பை நிரோசன் அவர்களும் வழங்கியுள்ளனர்.

இயக்குனர் B.கொண்ஸ்ரன் கிசான் சிறப்புரை A. பிரேம்குமார் (இயக்குனர் விபுலானந்தா இசை நடனக் கல்லூரி) R. பெஸ்லியோ வாஸ் ( பிரதி அதிபர் மட் / புனித மிக்கேல் கல்லூரி ) விமர்சன உரை - P. ரவிச்சந்திரன் (உதவிக்கல்விப்பணிப்பாளர் -மண்முனைமேற்கு) S.வள்ளுவன் (திருமறைக் கலாமன்ற இயக்குனர் சபை உறுப்பினர்) Y. கோபிநாத் (பொறியியலாளர்-ரெலிகொம்) விமர்சன உரையுடனான ஆசியுரையினை வழங்கியவர் அருட்பணி. எம் .ஸ்ரனிஸ்லொஸ் அடிகளார்.

**[ஜோ.அ.ச.கோ]**

## தேசிய மட்டத்தில் வெற்றி





சமூக விஞ்ஞான போட்டியில் அகில இலங்கை தேசியமட்டத்தில் வெற்றியீட்டிய மாணவர்களை கௌரவித்த நிகழ்வுபட்டிருப்பு கல்வி வலயத்தில் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி புள்ளநாயகம் தலைமையில் இடம்பெற்றது பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு.சி.பாஸ்கரன் அவர்களும் வலயபிரதிக்கல்விப்பணிப்பாளர், அதிபர், ஆலோசகர்கள் பாடசாலை அதிபர்கள். ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.

**சச்சு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹட்ரிக் வெற்றியில் ஆர்யா



சமீபகாலமாக ஹட்ரிக் வெற்றிகளை நோக்கி பாய்கிறார் ஆர்யா. ஆர்யா நடித்த ராஜாராணி, ஆரம்பம் என இரண்டு படங்களும் நிற்காத ரேஸ் குதிரைகளாக ஓடிக்கொண்டு இருக்கின்ற இந்த நேரத்தில் மூன்றாவது குதிரையாக இரண்டாம் உலகம் படமும் வரும் 22ம் திகதி ரேஸில் குதிக்கிறது. நிச்சயம் இந்தப்படத்தின் மூலம் ஆர்யா ஹாட்ரிக் வெற்றியை ருசிப்பது உறுதி என்கிறது பட யூனிட். காரணம் இந்தப்படத்தில் ஆர்யாவின் இரண்டுவிதமான தோற்றங்கள், அதற்காக அவர் கொடுத்திருக்கும் கடின உழைப்பு எல்லாம் பிரமிக்கத்தக்கவை. பி.வி.பி. சினிமா கிட்டத்தட்ட 60 கோடி 'ரூபாய் செலவில் செல்வராகவன் இயக்கத்தில் இந்தப்படத்தை தயாரித்துள்ளது. ஆர்யாவுக்கு ஜோடியாக அனு'கா நடிக்கும் இந்தப்படம் இது தெலுங்கில் 'வர்ணா' என்ற பெயரில் வெளியாகிறது. தனது கனவுப்படம் என்று சொல்லும் செல்வராகவன் இந்தப்படத்தை ப்ரேம் பை ப்ரேமாக செதுக்கியிருக்கிறார். ஆர்யா, அனு'கா இருவருமே தங்களது திரையுலக வாழ்க்கையில் இரண்டாம் உலகம் படம் ஒரு மறக்கமுடியாத அனுபவம் என குறிப்பிட்டுள்ளனர்.

# சிம்பு - நயன்தாரா ஜோடியை சேர்த்த பாலிவுட் காதல்



சிம்புவும், நயன்தாராவும் ஜோடி சேர்ந்ததற்கு பிரபலமான முன்னாள் பாலிவுட் ஜோடியே காரணம் என்ற தகவல் கசிந்துள்ளது. மீண்டும் இணையும் சிம்பு, நயன்தாரா ஜோடி குறித்து தமிழ் ரசிகர்களின் மத்தியில் இன்னும் ஆச்சர்யம் தீரவில்லை. ஆனால் நம்பித்தான் ஆகவேண்டும். பாண்டிராஜ் இயக்கிவரும் புதிய படத்தில் சிம்புவுடன், நயன்தாரா ஜோடியாக நடிக்க சம்மதித்திருப்பதை இயக்குனர் எப்படி சாதித்தார் என்றால் அது ஒரு பெரிய கதை. படத்தில் இரண்டு ஹீரோயின்கள் என்றாலும் முக்கியமான 'மயிலா' என்ற கதாபாத்திரத்தில் நயன்தாரா நடித்தால் நன்றாக இருக்கும் என நினைத்தார். பாண்டிராஜ் சொன்ன கதையும், இந்த கதாபாத்திரமும் நயனுக்கு பிடித்துப்போனாலும் சிம்பு ஹீரோ என்றதும் முதலில் தயங்கியிருக்கிறார். ஆனால் பாண்டிராஜோ பாலிவுட் நட்சத்திரங்களான் ரன்பீர்கபூரும், தீபிகா படுகோனேவும் தங்களது காதல் முறிவுக்குப்பின்னும் கூட இணைந்து நடித்து வருவதை சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் இதனை தொழில் என்ற கண்ணோட்டத்தில் பார்த்தால் அங்கே வேறு சலனங்களுக்கு வாய்ப்பே இல்லை என்றும் எடுத்துக்கூற, அவர் அளித்த நம்பிக்கையில் சம்மதித்திருக்கிறாராம் நயன்தாரா.

# பிரிட்டிஷ் அழகியுடன் விஜய்

ஜில்லா படத்தில் பிரிட்டிஷ் அழகியுடன் சேர்ந்து குத்தாட்டம் போடவுள்ளாராம் விஜய். பொங்கலுக்கு வெளியாகவிருக்கும் விஜய்யின் ஜில்லா படத்தின் படப்பிடிப்பு கிட்டத்தட்ட முடிவடையும் தருவாயில் உள்ளது. மலையாள சூப்பர் ஸ்டார், காஜல் அகர்வால், பூர்ணிமா பாக்யராஜ் என நட்சத்திர பட்டாளமே களமிறங்கியுள்ள இப்படம் ரசிகர்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. கடைசிகட்டமாக விஜய்யும் - பிரிட்டி' மொடல் ஸ்கேர்லட் வில்சனும் இணைந்து ஆட்டம் போடும் பாடல் ஒன்றை படமாக்குகிறார்கள். டான்ஸில் பட்டையைக் கிளப்பும் விஜய்யும், அவருக்கு இணையாக ஆடும் திறமை பெற்ற ஸ்கேர்லட்டும் இணைந்து ஆடவிருக்கும் இப்பாடல் ரசிகர்களை திரையரங்குகளில் எழுந்து நின்று ஆட வைக்கும் என்கிறது 'ஜில்லா' டீம். ஏற்கனவே தெலுங்கில் யவடு, கமெராமேன் கங்காதோ ராம்பாபு, இந்தியில் ஷாங்காய் போன்ற படங்களில் ஆடி புகழந்தடைந்தவர் ஸ்கேர்லட் வில்சன்.

# சூப்பர் ஸ்டாரின் டபுள் ட்ரீட்!

தனது பிறந்தநாளை முன்னிட்டு ரசிகர்களுக்கு டபுள் ட்ரீட் கொடுக்கவுள்ளார் சூப்பர் ஸ்டார். டிசம்பர் 12ம் திகதி சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் பிறந்த நாள், அன்றைய தினம் ரஜினியின் மகள் ஐஸ்வர்யா அஸ்வின் இயக்கி, தயாரித்துள்ள கோச்சடையான் படத்தின் ஓடியோ வெளியீட்டு விழா பிரம்மாண்டமான முறையில் நடைபெறவிருக்கிறது. நீண்ட நாட்களாக ரஜினியின் ரசிகர்கள் மட்டுமல்லாமல் மொத்த கொலிவுட்டையே ரொம்பவும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் கோச்சடையான் படத்தின் ஓடியோ வெளியீட்டு விழா முடிந்ததும், படத்தை பொங்கலை முன்னிட்டு ரிலீஸ் செய்ய திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. ரஜினியின் பிறந்த நாள், கோச்சடையான் படப் பாடல்கள் வெளியீடு என கொண்டாட இருக்கும் ரசிகர்களுக்கு இன்னொரு ட்ரீட் ஆக ரஜினிகாந்த், கமல்ஹாசன் இணைந்து நடித்த 16 வயதினிலே படமும் அன்றைய தினம் ரிலீசாக இருக்கிறது. பல வருடங்களுக்கு முன் பாரதிராஜா இயக்கத்தில் வெளியாகி சக்கை போடு போட்ட 16 வயதினிலே படம் டிஜிட்டல் மயமாக்கப்பட்டு சமீபத்தில் தான் இதன் டிரெய்லர் வெளியீட்டு விழா நடந்தது.

# சினிமுரசு

# கிருஷ்ணாவுக்கு டும் டும் டும்



திருமண பந்தத்தில் இணையப்போகிறாராம் நடிகர் கிருஷ்ணா கற்றது களவு, அலிபாபா, கழுகு ஆகிய படங்களில் கதாநாயகனாக நடித்தவர் கிருஷ்ணா பிரபல தயாரிப்பாளர் சேகரின் மகனும், இயக்குனர் விஷ்ணுவர்தனின் சகோதரரும் ஆன கிருஷ்ணா விரைவில் திரைக்கு வரவிருக்கும் 'வானவராயன் வல்லவராயன்' படத்தில் கதாநாயகனாக நடித்திருக்கிறார். அத்துடன், விழித்திரு, இல்ல ஆனாலும் இருக்கு, வன்மம் ஆகிய படங்களிலும் நடித்து வருகிறார். நடிகர் கிருஷ்ணாவுக்கும் கோவையைச் சேர்ந்த ரங்கநாதன் - வாசுகி தம்பதியரின் மகள் கைவல்யாவுக்கும் திருமணம் செய்ய இரு வீட்டாரும் ஏற்பாடு செய்துள்ளனர். இவர்களது திருமண நிச்சயதார்த்த விழா நாளை (20-11-13) மாலை கோவை ஜெனீஸ் கிளப்பில் நடைபெற உள்ளது. திருமணம் வருகிற பிப்ரவரி 6ம் திகதி கோவையில் நடைபெறவிருக்கிறது.



# அதிரடி வேட்டையில் ஸ்ரீதிவ்யா

ஒரே படத்தின் மூலம் ஓஹோ என பிரபலமாகிவிட்டார் ஸ்ரீதிவ்யா. ஆரம்பத்தில் காட்டு மல்லி, நகர்ப்புறம் ஆகிய இரண்டு படங்களில் நடிக்கத்தான் ஸ்ரீதிவ்யா கமிட் ஆனார். அதற்குப் பிறகே வருத்தப்படாத வாலிபர் சங்கம் படத்தில் நடித்தார். அந்தப் படத்தில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக நடித்து ஊதா கலரு ரிப்பன் பாட்டு மூலம் பிரபலமானார். இப்போது ஸ்ரீதிவ்யாவுக்கு வரிசையாக வாய்ப்புகள் குவிகின்றன. விதார்த்துடன் காட்டு மல்லி படத்தில் நடிப்பவர் இப்போது மேலும் மூன்று படங்களில் நடிக்கிறார். வி'ணுவுக்கு ஜோடியாக வீர தீர சூரன் படம், ஜீ.வி.பிரகா'ஹீரோவாக அறிமுகமாகும் பென்சில் படத்திலும் இவர்தான் ஹீரோயின். இந்நிலையில் அதர்வா நடிக்கும் ஈட்டி படத்தை மைக்கேல் ராயப்பன், வெற்றிமாறனுடன் இணைந்து தயாரிக்கிறார். இதில் அதர்வாவுக்கு ஜோடியாக ஸ்ரீதிவ்யா நடிக்கிறார். அதிகரித்து வரும் பட வாய்ப்புகளால் உற்சாகமாக இருக்கிறாராம் ஸ்ரீதிவ்யா.



# பாலிவுட்டில் ஸ்ருதிஹாசன் மீது தாக்குதல்



பாலிவுட்டில் நடிகை ஸ்ருதிஹாசன் தாக்கப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. உலகநாயகனின் மகளும், முன்னணி நடிகையுமான ஸ்ருதி□ாசன் இந்தியில் பிசியாக நடித்துக்கொண்டிருக்கிறார். இதனால் மும்பையில் பிளாட் ஒன்றில் தனியாக வீடு எடுத்து தங்கியுள்ளார். இந்நிலையில் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பாந்த்ராவில் ஸ்ருதி தங்கியுள்ள வீட்டு அழைப்பு மணி ஒலிக்க, பாதி தூக்க கலக்கத்துடன் கதவைத் திறந்துள்ளார். சட்டென்று உள்ளே நுழைந்த அந்த மர்ம நபர், அவரை கட்டிப்பிடித்து, கழுத்தை நெறிக்க முயன்றுள்ளார். உடனே சுதாரித்துக் கொண்ட ஸ்ருதி, அந்த நபரை பலமாக வெளியில் தள்ளி கதவை தாழிட முயன்றாராம். அதே நேரம் பலமாகக் குரலெழுப்பி செக்யூரிட்டிகளை அழைத்துள்ளார். இதனைத் தொடர்ந்து விரைந்து வந்த செக்யூரிட்டிகள் அந்த நபரைப் பிடித்து விரட்டியடித்துள்ளனர். ஸ்ருதியின் மும்பை ஏஜென்ட் இத்தகவல்களை உறுதிப்படுத்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதி உயர் வினைத்திறன் கொண்ட கார் உருவாக்கம்

மணிக்கு 560 கிலோ மீற்றர் வேகத்தில் பயணம் செய்யக்கூடியதும் 5,000 குதிரை வலு கொண்டதுமான கார் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. டுபாயில் இடம்பெற்ற இந்த வருடத்திற்கான மோட்டார் வாகன கண்காட்சியில் இடம்பெற்றிருந்த Devel Sixteen எனும் இந்த கார் ஆனது 1.8 செக்கன்களில் ஓய்விலிருந்து மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தினை அடையக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் மக்களை கவர்வதற்காக லம்போகினி காரினை ஒத்த வடிவமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# விளையாட்டுப் பையன்

## எடையைக் குறைத்தார் - இருந்தாலும் கொலை கொலை தான்



தனது சின்னஞ்சிறு பெறா மகன் மீது உருண்டு விழுந்து அவன் மூச்சுத்திணறி உயிரிழக்கக் காரணமாயிருந்த உலகின் அதிநிறை கூடிய பெண் தனது 1000 இறாத்தல் நிறையை 5 வருடங்களில் 600 இறாத்தலால் குறைத்துள்ளார்.

அமெரிக்க டெக்ஸாஸ் மாநிலத்தைச் சேர்ந்த மேரா ரொஸலெஸ் (32 வயது) என்ற மேற்படி பெண் தனது 2 வயது பெறா மகனான எலிஸியோ மீது உருண்டு விழுந்து அவனைக் கொன்றதாக குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருந்தார். பின்னர் விடுவிக்கப்பட்டார். 1000 இறாத்தல் நிறையைக் கொண்ட மேரா தவறுதலாக பாலகன் மீது உருண்டு விழுந்துள்ளார் எனத் தீர்க்கப்பட்டது..

## நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய போர்ட்டபிள் ஸ்பீக்கர் அறிமுகம்

Favi நிறுவனமானது புளூடூத் தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்டதும் இலகுவாக எடுத்துச் செல்லக்கூடியதுமான ஸ்பீக்கர்களினை அறிமுகம் செய்துள்ளது. Boomerang, Boomerang Mini என்ற இரண்டு வகை பதிப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.வெள்ளை, கறுப்பு, மஞ்சள் எனும் மூவகை நிறங்களில் வடிவமைக்கப்பட்டுள்ள Boomerang ஸ்பீக்கர் ஆனது 7.83 x 8.2 x 2 அங்குல அளவு கொண்டதாகவும், 6 W சக்தியினை வெளிவிடக்கூடியதாகவும் இருக்கின்றது. இதன் பெறுமதியானது 79.99 டொலர்களாகும்.இதேவேளை Boomerang Mini 4 W சக்தியினை வெளிவிடக்கூடியதாகவும், 5.91 x 6.12 x 1.49 அங்குல அளவுடையதாகவும் காணப்படும் அதேவேளை இதன் விலையானது 59.99 டொலர்களாக காணப்படுகின்றது.

## தூக்கிட வைத்த பேஸ்புக்




பேஸ்புக் சமூக வலைதளத்தில் சிறுவன் ஒருவன் தனது கணக்கிற்கு மோசமான கருத்தை அனுப்பியதால் மும்பையைச் சேர்ந்த 14 வயது சிறுமி தற்கொலை செய்து கொண்டார்.

இது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மும்பை கண்டிவிலியில் 14 வயது சிறுமி ஒன்பதாம் வகுப்பு படித்து வந்தார். நேற்று மாலை தனது பெட்ருமில் படித்து வந்தார். அவரது அம்மா கதவை தட்டியபோது உள்பக்கமாக பூட்டியிருந்தது தெரிந்தது.

இதனையடுத்து தொடர்ச்சியாக தட்டியபோதும் திறக்கவில்லை. இதனால் பதற்றமடைந்த சிறுமியின் பெற்றோர் கதவை உடைந்து உள்ளே பார்த்த போது அச்சிறுமி தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டது தெரியவந்தது.

# ஒரு கொலையின் கதை

(30) (மாயன்)

"ஓ..... அப்படியா? அந்தப் பற்றுச் சீட்டில் என்ன எழுதியிருந்தது என்பதைக் கவனித்தீர்களா?"

" இல்லை... நான் அவற்றில் அதிக கவனம் செலுத்தவில்லை"

"பறவாயில்லை... எந்தத் திகதியில் இவ்வாறு........

நடந்தது என்று உங்களுக்கு ஞாபகம் இருக்கின்றதா?

"மாதம் ஏப்ரல் என்பது எனக்கு ஞாபகம் இருக்கின்றது.... ஆனால் திகதி கிடத்தட்ட......... இல்லை..... முடியவில்லை... உடனடியாக ஞாபகப் படுத்த முடியவில்லை..... ஆனால் புத்தகங்களைப் பார்த்துக் கண்டு கொள்ளலாம்....

ஆஹா... ஞாபகம் வந்து விட்டது... அது ஏப்ரல் மாதம் தான்... புதுவரடு நாட்களில் தான் அவர்கள் இருவரும் வந்தார்கள்.... புதுவருடம் என்பதால் எனக்கு நன்றாக நினைவிருக்கின்றது....." என்றார் வரவேற்பாளன்...

அடுத்த கணம் புத்தகங்கள் தட்டப்பட்டன..... வரவேற்புப் புத்தகத்தில் ஏப்ரல் மாதம் 14ம் திகதி மாலை 2012ம் ஆண்டில் அலிகவினதும்... டொமியினதும் பெயர்களில் அறைகள் பதிவாகி இருந்தன...அந்தப் பதிவை மேற்கொண்டிருந்தவர் வரவேற்பாளனாகவே இருந்தார்.

அடுத்து விடுதிக்கு வருவோர் நிரப்பித் தரும் பதிவு அட்டையை அதே திகதியில் புலனாய்வாளர்கள் கண்டு கொண்டனர். அப் பதிவு அட்டையிலும் சந்தேக நபர்களின் கையெழுத்து காணப்பட்டது.

அவர்கள் மிகச் சரியாக 14ம் திகதி மாலை ஏப்ரல் மாதத்தில் வருகை தந்ததை அவ்வட்டை உறுதிப் படுத்தியது. அடுத்து பற்றுச் சீட்டைப் பார்த்த போது 18ம் திகதி மாலையுடன் கணக்குகள் யாவும் தீர்க்கப்பட்டிருப்பதும் புலனானது.

ஆக சந்தேக நபாகள் 14ம் திகதியிலிருந்து திருகோணமலையில் முகாம் இட்டிருக்கின்றார்கள். பின்னர் 18ம் திகதியில் விடுதியை விட்டு வெளியேறியிருக்கின்றார்கள்.

18ம் திகதி இரவே வெளியெறி விட்டார்களா அல்லது 19ம் திகதியா வெளியேறினார்கள் என்பதை அறிய வேண்டியிருந்தது.

"காவலாளியின் பதிவுப் புத்தகத்தை தர முடியுமா?"

" நிச்சயமாக...... " அடுத்த சில நிமிடங்களில் ஏப்ரல் மாதத்திற்கான காவலாளிப் பதிவேடு கைகளுக்குக் கிடைத்தது.

அப் பதிவேட்டின் 18ம் திகதிய இரவுக் குறிப்புக்களில் அவர்கள் இருவரும் தனித்தனியாக விடுதியை வந்தடைந்ததாக நேரங்கள் எழுதப்பட்டிருந்தன......

மறுநாள்... அதாவது 19ம் திகதி அதிகாலையில் அவர்கள் விடுதியை விட்டு வெளியேறியிருந்தனர்.

நீண்ட பெருமூச்சொன்றை விடுத்தனர் புலனாய்வாளர்கள்... போதுமான இரத்தம் மூளைக்குள் பாய்ந்தது.

"சரி இப்போதைக்கு இந்தத் தகவல்கள் போதுமானது.... எமக்கு நீங்கள் காண்பித்த அனைத்து பதிவேடுகளும், காவலாளிப் பதிவேடு உட்பட, தேவையாக இருக்கின்றது. தருகின்றீர்களா?"

" உரிமையாளரிடம் பேசிப் பார்ப்போம்.." என்றார் வரவேற்பாளன்....

தொலைபேசியழைப்பின் முடிவில் அவர்களுக்குத் தேவையானவற்றைக் கொடுத்து விடும்படி உரிமையாளர் அறிவித்தார்.

தேவையான பக்கங்களைப் பிரதிகள் எடுத்துக் கொண்டு அனைத்து உண்மைப் பிரதிகளையும் புலனாய்வாளர்கள் பெற்றுக் கொண்டனர். அதற்கு ஆதாரமாக தாம் பெற்றுக் கொண்டவற்றைப் பட்டியலிட்டு அக் கடிதத்தில் ஒப்பமிட்டு அலுவலக முத்திரையைக் குத்திக் கொடுத்து விட்டனர்.

எஞ்சிக்கிடந்தது ஒரேயொரு கேள்வி மட்டும் தான்.....

மெதுவாகக் கனைத்துக் கொண்ட பலனாய்வாளர் ஒருவர் வரவேற்பாளனைப் பார்த்தார்.....

" தேவையேற்பட்டால் நீங்கள் இவர்கள் இருவரையும் அடையாளம் காட்ட வரமுடியுமா?....." என புலனாய்வாளர் ஒருவர் கேட்டு முடியும் முன்னரேயே அடுத்த புலனாய்வாளர் சடுதியான குரலில் "நீங்கள் வரத்தான் வேண்டும்...வந்து இவர்கள் இருவரையும் அடையாளம் காட்டத்தான் வேண்டும்" என்றார்.

"நிச்சயமாக நான் வருகின்றேன்...." ஆனால்.....

சிறிய மௌனத்தின் பின் அவர் தொடர்ந்தார்.... " அவர்கள் அப்படி என்னதான் செய்திருக்கின்றார்கள்?" என்று முடிக்கும் முன்பே...

மீண்டும் இடை மறித்தது இரண்டாவது புலனாய்வாளரின் குரல்....

"கொலை.... கொலை செய்தவர்களாகச் சந்தேகத்தின் பேரில் கைதாகி இருக்கின்றார்கள்"

வரவேற்பாளன் வெலவெலத்துப் போய் விட்டார்.... " கொலைச் சந்தேக நபர்களா?" ஆ...வெனத் திறந்து கிடந்தது அவரது வாய். "ஆண்டவா... விடுதிக்



கட்டணத்தைச் செலுத்தாமல் போக எத்தனித்த போது கைகலப்புவரை சென்றோமே.... அவர்களா கொலை செய்தார்கள் என்ற சந்தேகத்தில் கைதாகி இருக்கின்றார்கள்...."

அடுத்து வரவேற்பாளனின் முழுப் பெயர், முகவரிகள், தொடர்புகள், ஆடத்த சில நாட்களுக்கு அவர் பயணிக்க இருக்கும் இடங்கள் என யாவும் புலனாய்வாளர்களின் பதிவேட்டில் தரவேற்றப்பட்டது.

"நன்றி..நாம் சென்று வருகின்றோம்... அஞ்சவேண்டாம்... அச்சம் தரத்தக்க யாதாயினும் நடக்குமாயின் எம்மை உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்"

புலனாய்வாளர்கள் இருவரும் விடுதியை விட்டு வாசலுக்கு நகர்ந்தனர்..... அழைப்பை ஏற்படுத்தியவுடன் அருகில் படமாளிகைக்கருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காவல்துறை வண்டி அவர்களை அழைத்துச் செல்ல வருகை தந்தது.

வரவேற்பாளன் தம்மிடம் கூறிய யாவற்றையும் மீட்டுப்பார்த்துக் கொண்டே புலனாய்வாளர்கள் பிரதான காவல்துறை நிலையம் நோக்கிப் பயணித்தனர். இடையிடையே தமது நோட்டுப் புத்தகத்தில் சில கிறுக்கல்களை மேற்கொண்டனர்.

அடுத்த சாட்சியான கேதீஸின் நண்பனைச் சந்திக்க வேண்டியிருந்தது. அந் நண்பனின் விபரங்கள் யாவும் உள்ளூர்க் காவல்துறையினரால் திரட்டப்பட்டிருந்தன...

அவரை அழைத்துப் பேசுவதாக முடியவாகியது. அதற்கமைய கேதீஸின் நண்பன் காவல்துறை தலையகத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்....

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

## மரதன் ஓட்டப்போட்டி



தி- கிண்ணியா அல்-முஜாஹிதா வித்தியாலயத்தின் பழைய மாணவர்களுக்கான மரதன் ஓட்ட போட்டி கடந்த 18 ம் திகதி இடம்பெற்றது. வித்தியாலய அதிபர் எஸ்.ரீ.நஜீம் தலைமையில் இடம்பெற்ற இந் இப்போட்டியில் கிண்ணியா மக்கள் வங்கியின் முன்னாள் முகாமையாளர் எம்.எஸ்.சரீப் பிரதம அதிதியாக கலந்து கொண்டு போட்டியினை ஆரம்பித்துவைத்தார். இதில் ஏம்.எஸ்.அப்ரான், என்.எம்.அஸ்கான், எம்.எம்.மதுராஸ் ஆகியோர் முறையே வெற்றி பெற்றுள்ளனர். இப்போட்டியானது, பாடசாலையின் 50 வருட நிறைவையொட்டி நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 1330 கிலோமீற்றர் சைக்கிளோட்டத்தின் முதல் கட்டம் யாழில் நிறைவு



கொழும்பு, மகரகமவிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட 1330 கிலோமீற்றர் கொண்ட சைக்கிளோட்டம் 20 ம் திகதி யாழ்.துரையப்பா விளையாட்டரங்கினை வந்தடைந்தது. ஜனாதிபதியின் 68ஆவது பிறந்த தினத்தினையொட்டி மகரகமவில் இருந்து யாழ். வரையான சைக்கிளோட்டம் கடந்த 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதில் முப்படைகளைச் சேர்ந்த 150 வீரர்கள் பங்குபற்றியிருந்தனர். முதல் நாள் புத்தளத்தினை வந்தடைந்த மேற்படி சைக்கிளோட்டப் போட்டி தொடர்ந்து இரண்டாம் நாள் (19) புத்தளத்திலிருந்து வவுனியாவை வந்தடைந்தது. மூன்றாம் நாளான நேற்று வவுனியாவிலிருந்து ஆரம்பித்த மேற்படி சைக்கிளோட்டம் நேற்று மதியம் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கிற்கு 12 பேருடன் வந்தடைந்தது. துரையப்பா விளையாட்டரங்கில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் இடம்பெற்றதுடன், வெற்றிபெற்ற வீரர்களுக்கான பரிசில்களை வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க இணைந்து வழங்கினார்கள். இதில் முதலிடம்பெற்ற வீரருக்கு சலவை இயந்திரமும், இரண்டாமிடம் பெற்றவருக்கு சைக்கிளும் வழங்கப்பட்டன.




## சிலர் இவருக்கு எதுக்காக இவ்வளவு மரியாதை



என்று கேட்கிறார்கள். சிலர் இவரின் ஓய்வுக்கு எதற்காக இவ்வளவு ஆர்ப்பாட்டம் என்று கேட்கிறார்கள். சிலர் இவருக்கு எதற்காக உயர்ந்த விருது கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்கிறார்கள். இவர்களெல்லாம் சில விடயங்களைப் புரிந்து கொள்ள வேண்டும்

சர்வதேசக் கிரிக்கெட் விளையாடுவது இலகுவல்ல, அதிலும் 24 வருடங்கள் விளையாடுவது சாதாரண விடயமல்ல. அந்த 24 வருடங்களிலும் தனது Batting Avg இனை குறையாமல் வைத்திருப்பதென்பது எல்லோராலும் செய்ய முடியாதது. மிக முக்கியமாக 24 வருடங்கள் உலகின் எல்லா விதமான பந்துவீச்சாளர்கள்,காலநிலைகள், ரசிகர்கள், அம்பயர்களின் மிகத்தவறான தீர்ப்புக்கள், ஏச்சுக்கள் விமர்சனங்கள், எல்லாவற்றையும் எதிர்கொண்டு எந்தவொரு இனத்த வரையோ நாட்டவரையோ மதத்தவரையோ புண்படுத்தாமல் தனது பணி உண்மையான கிரிக்கெட் விளையாடுவது மட்டுமே என்று வாழ்ந்த ஒரு வீரன் சச்சின் ரெண்டுல்கர்.

அதனால்தான் இன்றும் அவர் எந்த மைதானத்துக்குள் நுழைந்தாலும் அங்குள்ள எல்லாத்தரப்பு மக்களும் இன,மத, நிற, மொழி பேதமின்றி தம்மையறியாமலேயே எழுந்து நின்று ஆராவரிக்கிறார்கள் மரியாதை கொடுக்கிறார்கள். எனக்குத்தெரிய சச்சினை எவரும் இந்திய கிரிக்கெட் வீரன் என்று மட்டும் அடையாளப்படுத்துவதில்லை. அவரை சர்வதேசக் கிரிக்கெட்டின் காவலன் என்று பார்க்கிறார்கள்.தங்களில் ஒருவனாகக் காண்கிறார்கள். இது எதைக்காட்டுகின்றது?அவரைக் கௌரவிக்கும் நேரத்தில் மக்கள் தம்மிடையே எந்த வேறுபாட்டையும் காட்டுவதில்லை. பார்ப்பதில்லை ஒன்றாகிறார்கள் ஒற்றுமையாகிறார்கள் இப்படியாக கிரிக்கெட் என்ற அற்புதமான ஒரு விளையாட்டை உண்மையாக நேர்மையாக பல வருடங்களாக விளையாடி மக்களெல்லோரையும் ஒன்றுபடுத்திய அந்த வீரனை கௌரவிப்பதைக்குறை கூறுவது ஏன் என்பது புரியவில்லை.

ஒருவேளை அவர் சமீபத்தில் ஒரு அரசியல் கட்சியில் இணைந்து கொண்டதால் அதைச் சம்பந்தப்படுத்தில் சிலர் இப்படியான குற்றச்சாட்டுக்களை வைக்கக்கூடும் ஆனால் அவர்கள் தங்களின் மனசாட்சியை கேட்டுப்பார்த்தால் உண்மை புரியும். சச்சின் அரசியல் கட்சியில் சேர்ந்ததானால் தானா அவருக்கு விருதுகள் கொடுக்கப் படுகின்றது? இல்லை அவர் செய்த சாதனை மிகப் பெரிய சாதனை. இனியொருவரால் செய்யமுடியாதசாதனை. எனவே அவருக்குக் கிடைக்கவேண்டிய அங்கீகாரம்தான் கிடைத்துள்ளது.

ஆஸ்திரேலிய வீரர் அடம் கில்கிறிஸ்ட்டின் பேட்டியொன்றை சமீபத்தில் படித்தேன். அதில் சச்சின் ஓட்டங்கள் எடுக்கிறாரோ இல்லையோ அவரின் பிரசன்னம் இளம் வீரர்களுக்கு அருகில் இருக்கும் போது அந்த இலம் வீரர்கள் தம்மால் எதையும் சாதிக்க முடியும், எந்த போட்டியிலும் வெல்ல முடியும் என்ற மனநிலையுடன் இருப்பார்கள் என்பதைத் தான் கண்டதாக கூறியிருந்தார். தன்னுடன் ஐ.பி.எல். லில் விளையாடிய ரோஹித் 'ர்மா மற்றும் இன்னொரு இந்தியக் கிரிக்கெட் வீரர் ஆகிய இருவரிலும் சச்சின் என்ற பெயர் மிகப் பெரிய மாற்றத்தையும் ஊட்டத்தையும் ஏற்படுத்தியிருப்பதை தான் நேரடியாக கண்டுள்ளதை மிக அழகாக ஒரு ஆஸ்திரேலிய ஊடகத்தில் பதிந்திருந்தார் கில் கிறிஸ்ட்.

இந்தக் கில்கிறிஸ்ட்டுக்கு உலகமெல்லாம் பல பில்லியன் கிரிக்கெட் ரசிகர்கள் இருக்கிறார்கள் ஆனால் அவர் சச்சினைப்பற்றிப் பெருமையாகக் கூறியுள்ளார். அதே போன்று உலகின் பல்வேறு நாடுகளின் கிரிக்கெட் ஜாம்பவான்கள் எல்லோருமே சச்சினைக் கிலாகித்திருக்கும் போது, ஆஸ்திரேலியாவில் ஏற்கனவே மிகப் பெரிய விருதொன்று கொடுத்துக் கௌரவிக்கப்பட்ட சச்சினுக்கு அவர் பிறந்த நாட்டில் விருது கொடுப்பதை அரசியல் சாயம் பூசுவது எவ்வாறு நியாயமாகும்.?

**சச்சின் டெண்டுல்கர்** உலகை அழிக்கக்கூடிய அணுக்குண்டுகளையோ, மக்களைப் பிரிக்கும் வேறுபாடுகளையோ,அவர்களுக்குள் வெறியை ஏற்படுத்தும் மதப் பிரச்சாரங்களையோ அவர் செய்யவில்லை. தன்னுடைய விளையாட்டின் மூலம் அவர்களை மகிழ்வித்து ஒன்றுபடுத்திய உன்னத சேவையை செய்து வந்த மாமனிதன் அவர். அவருக்கு விருது கொடுத்துக் கௌரவிப்பது எதிர்காலத்தில் இன்னும் எத்தனையோ நல்லவர்களை உருவாக்க வழிவகுக்கும்.

உண்மையான கிரிக்கெட் வீரர்களை உலகுக்கு அளிக்கும். சென்ற நூற்றாண்டில் ஆஸ்திரேலிய வீரர் சேர்.பிரட்மனுக்கு அந்த மரியாதை கொடுக்கப்பட்டது. இதோ இப்போ பிரட்மனுக்கு அடுத்து இன்னொருவருக்கு கிடைத்துள்ளது.

அவர்தான் சச்சின் சச்சினுக்கு உலகின் அதி உயர் விருதான சேர். பட்டம் பிரிட்டிஸ் மகாராணியால் வழங்கப்படும் காலம் வெகுதூரத்தில் இல்லையென்பதே எனது எண்ணம். பட்டங்களால் பலர் பெருமை பெறுகிறார்கள், ஆனால் சிலரால்தான் பட்டங்கள் பெருமை பெறுகின்றன. இதில் சச்சின் இரண்டாவது வகை. இப்படியாக உலகமே தூக்கி வைத்துக் கொண்டாடும் ஒரு உன்னதவீரனை அவன் பிறந்த நாடு கௌரவிப்பதை குறை கூறுவது எவ்விதத்திலும் நியாயமானதல்ல. .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா மீது இலங்கை பாய்ச்சல்

மீன்பிடி விடயம் தொடர்பாக நிலவி வரும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு கூட்டுக்குழு அமைப்பதற்கு இலங்கை மேற்கொண்ட முயற்சிகளை இந்தியா தாழ்த்தி வருகின்றது. இதனால் இந்தியா மீது இலங்கை கடும் சீற்றமடைந்துள்ளது.

அத்துடன் இந்தியாவின் இரட்டை நிலைப்பாடு தொடர்பாகவும் இலங்கை கருத்தறிவித்துள்ளது. தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என வெளிப்படையாக கூறிவரும் இந்தியா வடக்குத் தமிழ் மக்களின் வாழ்வாதாரமான மீன்பிடியில் கைவைத்துள்ளது. இதுவே இந்தியாவின் இரட்டை நிலைபாடு என இலங்கை சாடியுள்ளது.

Sunday LEADER

## தலையீடு இல்லாமலேயே பொது நலவாயப் பெறுமதிகளை அரசு பேணும்

பொதுநலவாயத் தலைமைத் துவத்தை ஏற்றுள்ள சனாதிபதியின் ஆனைக்கேற்ப பொதுநலவாய நாடுகள் பொது நலவாயப் பெறுமதிகளை தலையீடோ அல்லது நிழல் இராச்சி யங்களோ இன்றி முன்னெடுக்க உதவப் போவதாக நிமல் ஸ்ரீகால டி சில்வா மொழிந்துள்ளார்.

Sunday OBSERVER

## ஊடகச் கட்டுப்பாட்டுச் சட்டத்தை கருத்திற் கொள்க

இலங்கைப் பத்திரிகையாளர் பிரதம ஆசியர்கள் குழு ஊடகக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை கருத்திற் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது. அத்துடன் அவ் அமைப்பின் இறுதி வாசகம் "சனநாயகம் சுகந்திரம் மற்றும் பொது நலவாயப் பெறுமதிகளை கருத்திற் கொண்டுதயவு செய்து பிரதமரே உங்களது அரசின் நடவடிக்கையைச் சற்று சிந்தியுங்கள் எனக் கேட்டுள்ளது.

Sunday TIMES

## உண்மைக்கும் இணைக்கப்பாட்டுக்கும் ஆணைக்குழுக்கள்

உண்மைக்கும் இணைக்கப் பாட்டுக்கும் ஆணைக்குழுக்களை உருவாக்கும் முன் மொழியை தென்ஆபிரிக்க சனாதிபதி மேற் கொண்டிருந்தார். அவ் ஆணைக் குழுக் களை அமைப்பது தொடர்பாக அரசு சிந்தித்து வருகின்றது. மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறுதல் தொடர் பாகவே இவ் ஆணைக்குழு நியமிக்கம் படவுள்ளது. இவ் ஆணைக்குழுவின் ஊடாகவே யுத்தக் குற்றச்சாட்டுகளையும் விசாரணை செய்யவும் முடியும் எனது தெரிகின்றது.

Sunday TIMES

## பெருநாட்களில் நுகர்வுப் பொருட்களின் மீதுகண்காணிப்பு

கிறிஸ்மஸ் மற்றும் புதுவருடப் பிறப்புக்கான காலம் கனிந்துள்ள வேளையில் இருப்பு அகற்றும் விற்பனைகளும் பெருமளவு கழிவுகளும் வழங்கப்படவுள்ளன. ஆனால் இவ்வாறு விற்பனை செய்யப்படும் பொருட்கள் தரமற்றதாகவும், வழக்கிழந்த வையாகவும், திகதி முடிந்தவையாகவும் இருக்கலாம். இவ் ஆபத்தை தவிர்ப்பதற்காக நுகர்வோர் அதிகார சபையானது தனது பறக்கும் படையைப் பயன்படுத்தப் போவதாக அறிவித்துள்ளது.

Sunday OBSERVER

## சிறுநீரகக் கடத்தலில் நிலையமாகும் இலங்கை

இந்தியாவிலிருந்து சிறுநீர ங்களை இலங்கைக்குக் கடத்தும் முயற்சி யொன்றை பிரித்தானிய ரெலிகிராப் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இலங்கைக்குக் கடத்தப்படும் சிறுநீரகமானது வெளிநாட்டவர்களுக்கு இலங்கை வைத்தியசாலைகளில் பொருத்தப்படுவதாக தெரிவிக்கப் படுகின்றது. 40 000 டொலர்கள் அறுவைச் சிகிச்சைக்காக வைத்திய சாலைக்குச் செல்வாகும் அதேவேளை 35000 டொலர்கள் சிறுநீரகத்தைப் பெற்றுத்தருபவருக்காக செலுத் தப்படுகின்றது.



Sunday LEADER

## குழப்பத்தை ஏற்படுத்திய பிரித்தானிய 'ஸ்ரீயூகோ'வின் பேச்சு

பொதுநலவாயப் பொதுமக்கள் குழுவின் இறுதித்தினத்தில் பிரித்தானிய உட்துறை அமைச்சரின் பேச்சானது அக்குழுவிலும் இலங்கையிலும் கடும் குழப்பத்தை ஏற்படுத்தியிருப்பதாக பொதுநலவாயப் பொது மக்கள் குழுத் தலைவர் தெரி வித்துள்ளார்.

Sunday OBSERVER

## வரியற்ற வாகன அனுமதிப்பத்திர விற்பனைக்கு புதிய சட்டங்கள்

வரியற்ற வாகன அனுமதிப் பத்திரங்களை கொள்வனவு செய்ப வர்கள் தமது சொத்துக்களைப் பகிரங்கப்படுத்த வேண்டும் எனும் புதிய சட்டம் அமுலாகியுள்ளது. அத்துடன் அவ்வாறு கொள்வனவு செய்பவர்கள் வரிவிடுவிப்புச் சான்றிதழையும் அரித் தினைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் நிதி திட்டமிடல் அமைச்சின் சுற்று நிருபம் தெரிவிக்கின்றது.

Sunday TIMES

## சனல் 4ஐ நாம் அழைக்க வில்லை திஸ்ஸ



ஸ்ரீகோத்தாவில் நடைபெற்ற ஊடகா சந்திப்பிலும், மனித உரிமைக் கண்காட்சியிலும் சனல் 4 ஊடகப்பிரிவை கலந்து கொள்ளுமாறு தாம் அழைக்க வில்லை என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. தமது தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்வுகளுக்கு எவ் ஊடகப்பிரிவும் வரக்கூடியவாறே இருந்ததாகவும் தகவலை அறிந்து கொண்ட எவரும் அங்கு வருகை தந்தனர் எனவும் ஐ.தே.க தெரிவித்துள்ளது.

Sunday LEADER

## பெரும் முதலீட்டு ஒப்பந்தத்தில் சீனா கைச்சாத்து

பொதுநலவாய மாநாட்டுடன் வெளிநாட்டு முதலீடுகளைப் பெரு மளவில் எதிர்பார்ந்திருந்த இலங்கைக்கு சீனாவே மீண்டும் பாரிய முதலீடுகளை மேற்கொள்ள முன்வந்துள்ளது. கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித் திட்டத்திலேயே சுமார் 1.3 பில்லியன் அமெரிக்க டொலர்களைச் சீனா முதலீடு செய்யுள்ளது.

Sunday TIMES

## இலங்கையை இறுக்கியுள்ள பொதுநலவாயம்

இலங்கை பொதுநலவாயத் தலைவர்கள் மாநாட்டை நடாத்தியதைத் தொடர்ந்து கடுமையான நெருக்குதல்களுக்கு முகம்கொடுத்துள்ளதாக பொது நலவாய செயலகப் பேச்சாளர் ரிச்சாட் உகு தெரிவித்தார். நல்லாட்சி, சட்டத்தின் பிர யோகம், பொதுநலவாயப் பெறுமதிகள் போன்றவற்றை

அங்கத்துவ நாடுகளிடையே அமுலாக்குதல் தொடர்பாக எழுந்துள்ள சர்சைகளைப் பற்றி அங்கத்துவ நாடுகள் கலந்தாலோசித்து அவற்றைக் சரியான வழிகளில் நடைமுறைப்படுத்தும் முடிவை ஏற்றுக் கொண்டுள்ளன. இதனால் இலங்கையும் அக் கட்டளைகளுக்கு இணங்கி ஒழுக வேண்டியிருக்கும் என 'ரிச்சாட் உகு' தெரிவித்தார்.

Sunday LEADER

## ராசபக்சவும் – கெமரூனும் சூடான வார்த்தைப் பியோகத்தில்

போரிற்குப் பின்னரான இலங்கையின் நிலைவரத்தை மதிப்பிடுவதற்கு பொருத் தமான நேரத்தை எடுக்காமல் கெமரூன் மதிப்பிட்டு விட்டார் என இலங்கை சனாதிபதி கூறியுள்ளார்.

எமது நிலைமையைப் புரிந்து கொள்ளாமல் அறிக்கையிடாமல் நியாயமாக எம்மெப் புரிந்துகொள்ள மேலும் முயற்சிக்க வேண்டும் என்றும் சனாதிபதி கூறியுள்ளார். புலம் பெயர் தமிழ் அமைப்புக்களால் தவறாக கெமரூன் வழிநடத்தப்பட்டிருப்பதாகவும் அதனடிப்படையிலேயே கெமரூன் தனது கருத்துக்களை தெரிவித்திருப்பதாகவும் சனாதிபதி கூறியுள்ளார். இதற்குப் பின்னர் யாழ் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பிய கெமரூன், சர்வதேச விசாரணை யொன்று போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தேவைப்படுமாயின் அதனை இலங்கை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

Sunday TIMES

## தேவையான மருந்துகளை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் உற்பத்தி செய்யும்



அடிப்படைத் தேவை யான மருந்துப் பொருட்கள் சில வற்றை இனிவரும் காலங்களில் அரச மருந்தாக்கற் கூட்டுத் தாபனமே உற்பத்தி செய்யும்.

மருந்துப் பொருள் உற்பத்தியை உள்நாட்டில் ஊக்குவிக்கும் செயற்பாடு களுக்கு அமைச்சரை அனுமதி கிடைத்துள்ளதை அடுத்தே இந் நடவடிக்கையில் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் இறங்கவுள்ளது.

Sunday OBSERVER

## ஸ்ரீகோத்தாவில் கைதானவர் புலிச் சந்தேக நபரல்ல

மனித உரிமைக் கண்காட்சிக்காக முல்லைத்தீவிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்திற்கு வந்திருந்த போது கைதான வடக்கின் வாலிபர் புலிகளுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தவர் என்று குற்றஞ்சாட்டப் பட்டிருந்தார்.

பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது அவர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாமையால் அவர் விடுதலை செய்யப்பட்டார்.



Sunday LEADER

## பொதுநலவாய இளைஞர் செயலகம் ஹம்பாத்தோட்டையிலா? இலண்டனிலா?



இலண்டனில் நிறுவப்பட வேண்டும் என எதிர்ப்பலைகள் எழுந்துள்ள பொதுநலவாய இளைஞர் செயலகம் ஹம்பாந்தோட்டையிலேயே நிறுவப் படவுள்ளது. நிரந்தரத் தலைமையகத்தை இலங்கையின் ஹம்பாந்தோட்டையில் நிறுவவும் அடுத்து வரும் இரு வருடங்களுக்கு அப் பொதுநலவாய இளைஞர் தலைமையகத்திற்கு ஏற்படும் அனைத்துச் செலவுகளையும் பொறுப்பேற்கவும் இலங்கை முன்வந்துள்ளதாக தெரிகின்றது.

Sunday OBSERVER

## வெளிவிவகார அமைச்சு 800 மில்லியன் கடன்

பொதுநலவாய மாநாட்டை யொட்டி கொழும்பு நகரை அழகாக்கும் நடவடிக்கைகளுக்காக கொழும்பு மாநகரசபை 800 மில்லியன் செலவுகளைச் செய்துள்ளது. அச் செலவினை வெளிவிவகார அமைச்சே செலுத்த வேண்டும் என மாநகரசபை தெரிவித்துள்ளது. கொழும்பு மாநகரசபையின் நிதிலேயே இந்தச் செலவுகளைச் செய்ய வேண்டும் என்றும் அலை மீளளிக்கப்படும் என்றும் வெளிவிவகார அமைச்சர்க்கும் மாநகர முதல்வருக்கும் இடையே இணக்கம் ஏற்படுத்தப்படுத்தது.

Sunday LEADER

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விமுரசு

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான

## பரீட்சை வழிகாட்டல்

### பாடம் - விஞ்ஞானம், 11

1. சூழல் வெப்பநிலை கூடுதலாக இருக்கும் ஒரு நாளில் சாதாரண நாளைக் காட்டிலும் கூடுதலான வியர்வை ஏற்படும். இச்செயன்முறையை எடுத்துரைப்பதற்குப் பின்வரும் எக்கூற்று மிகவும் உகந்தது?
   1. மிகையாக வியர்த்தல் நோய் நிலையாகும்
   2. வியர்த்தல் தன்னிச்சையாக நடைபெறும் தூண்டற்பேறாகும்
   3. வெப்பமான நாட்களில் வியர்வையுடன் கழிவுப்பொருட்களும் வெளியேறும்.
   4. வியர்த்தல் அகவெப்பநிலையை மாறாமல் பேறும் செயலாகும்.
2. ஓடிகள் மூலம் பதியமுறை இனப்பெருக்கம் நடைபெறும் தாவரம் எது?
   1. அன்னாசி 2. சதைக்கரைச்சான் 3. வல்லாரை 4. வெங்காயம்
3. ஆவியுயிர்ப்பைக் குறைப்பதற்கு கள்ளித் தாவரங்கள் கொண்டுள்ள இசைவாக்கம்
   1. இலைகள் சதைப்பிடிப்புள்ளதாக இருத்தல்
   2. இலைகள் அருகில் இருத்தல்
   3. தண்டுகள் முட்களைக் கொண்டிருத்தல்
   4. பரந்த வேர்த் தொகுதிகள் இருத்தல்
4. இதயத் துடிப்பைக் கட்டுப்படுத்தும் மூலையின் பகுதி எது?
   1. மூளையம் 2. மூளி 3. கபச்சுரப்பி 4. நீர்வளைய மையவிழையம்
5. மனிதனின் நரம்புத் தொகுதியுடன் தொடர்பு படும் இரு நிகழ்ச்சிகள் அ, ஆ ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ளன.
   அ - எப்போதும் கண்இமை மூடி திறத்தல்
   ஆ - மாம்பழத்தைக் காணும் போது உமிழ்நீர் சுரத்தல்
   இவ்விரு நிகழ்ச்சிகள் பற்றிய சரியான கூற்றுக்கள் யாது?
   1. அ, ஆ ஆகிய இரண்டும் தெரிவினைகள்
   2. அ, ஆ ஆகிய இரண்டும் இச்சையின்றிய செயல்கள்
   3. அ, ஆ ஆகிய இரண்டும் இச்சைவழி இயங்கும் செயல்கள்
   4. அ தெரிவினையாக இருக்கும் அதேவேளை ஆ இச்சையின்றிய செயலாகும்.
6. பின்வருவனவற்றுள் எக்கட்டமைப்பு ஊத்தேக்கியாவின் குழாயினால் தொண்டையுடன் தொடுக்கப்பட்டுள்ளது?
   1. நடுச்செவி 2. நுரையீரல்கள் 3. மூக்கு 4. இரப்பை
7. தெசுத்தொசுத்தெரோன் ஓமோனின் தொழில் யாது?
   1. உடலில் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துதல்
   2. குருதிக் குளுக்கோசு மட்டத்தை மாறாது பேணுதல்
   3. பெண்களின் துணைப்பால் இயல்புகளைக் கட்டுப்படுத்துதல்
   4. ஆண்களின் துணைப்பால் இயல்புகளைக் கட்டுப்படுத்துதல்
8. ஒட்டுண்ணியைப் பின்வரும் எந்தக் கூற்று நன்கு எடுத்துரைக்கின்றது?
   1. ஓர் அங்கியின் மூலம் வேறோர் அங்கிக்கு நோயைத் தோற்றுவிக்கும் தொடர்புடமை
   2. இரு அங்கிகளுக்கிடையே நிலவும் இரண்டுக்கும் பயன்தரும் தொடர்புடமை
   3. இரு அங்கிகளும் ஒன்றாக வாழ்ந்து கொண்டு ஓர் அங்கி மற்ற அங்கிக்கு தீங்கு பயக்கும் தொடர்புடமை
   4. ஓர் அங்கி வேறோர் அங்கியை இரையாக்கிக் கொண்டு தனது சக்தித் தேவையை நிறைவேற்றிக் கொள்ளல்.
9. பின்வருவனவற்றில் எது தனியென்களின் பாரம்பரிய இயல்பாக அமைவதில்லை?
   1. உயரம் 2. நுண்மதி 3. தோலின் நிறம் 4. தசை வளர்ச்சி
10. பின்வரும் விலங்குகளுள் உபயவாழி எது?
    1. தவளை 2. முதலை 3. உடும்பு 4. நீர்பாம்பு
11. குருதிப்படலத்தை சோதிப்பதன் மூலம் டெங்கு நோயை இனங்காணலாம். எக்குருதிக் கூறின் எண்ணிக்கை குறைவதன் மூலம் அதனை இனங்காணலாம்?
    1. நடுநிலை நாடி 2. யோசி நாடி 3. மூல நாடி 4. சிறுதட்டுக்கள்
12. ஒரு வித்திலைத் தாவரங்களுக்கு விசேடமான இயல்பு பின்வருவனவற்றுள் யாது?
    1. மூல வேர் இருத்தல் 2. நார் வேர்த் தொகுதி இருத்தல்
    3. தண்டு பிரிந்திருத்தல் 4. இலைகள் சீறிலைகளாகப் பிரிந்திருத்தல்
13. மின்பகுப்பின் மூலம் மின்முலாமிடும் போது யாதாயினும் ஓர் உலோக மேற்பரப்பின் மீது நிலையான சீரான மின் முலாமிடுதலைப் பெறுவதற்குப் பின்பற்றவேண்டிய நடைமுறை யாது?
    1. மின்பகுபொருளை அசையாமல் வைத்திருத்தல்
    2. மின்பகு பொருளின் வெப்பநிலையைத் தொடர்ச்சியாக மாற்றுதல்
    3. மின்பகுப்பிற்கு மிகச் சிறிய மின்னோட்டத்தைப் பிரயோகித்தல்
    4. மின்மூலாமிட வேண்டிய பொருளின் மீது கொழுப்புப் படையை பூசுதல்
14. பயன்படுத்தப்பட்ட எண்ணெயை பகுதிபடக் காய்ச்சி வடிக்கும் போது கிடைக்கும் 4 வகை விலை பொருட்கள் அ, ஆ, இ, ஈ எனக் கீழே காட்டப்பட்டுள்ளன.
    அ - காசலீன் (பெற்றோல்) ஆ - மண்ணெண்ணெய்
    இ - டீசல் ஈ - மசகீடு எண்ணெய்
    பகுதிபடக் காய்ச்சி வடிக்கும் போது இவை ஆவியாகிப் போகும் ஒழுங்குமுறையை சரியாகக் காட்டும் விடை யாது?
    1. அ, ஆ, இ, ஈ ஆகியன 2. அ, இ, ஆ, ஈ ஆகியன
    3. ஆ, இ, அ, ஈ ஆகியன 4. இ, அ, ஆ, ஈ ஆகியன
15. இயற்கைச் செயற்பாடுகளின் விளைவாக மனிதனுக்கு ஏற்படும் சேத உயிர் அழிவுகளை இயற்கை அனர்த்தங்களாக அறிமுகம் செய்யலாம். பின்வருவனவற்றில் எது இயற்கை அனர்த்தம் அன்று?
    1. மின்னல் தாக்கப்பட்டு மனிதன் இறத்தல்
    2. காட்டுயானைகள் கிராமங்களில் புகுந்து மனிதனுக்கு சேதமேற்படுத்துதல்
    3. மழை மிகுந்த காலங்களில் மண்சரிவு ஏற்படுதல்
    4. கடற்கரையோரங்களில் உள்ள நிலப்பகுதிகள் கடலரிப்புக்கு உட்படுதல்

விஞ்ஞான பரீட்சை வழிகாட்டல் ஆசிரியர்
குரு கல்வி நிலையம், சாம்பல் தீவு, புல்பண்குளம்



### பாடம் - கணிதம், 10

01) i) சுட்டி அறிவை பயன்படுத்தி x, y ஐ காண்க.

$$4^x = 64^{y+4} \quad , \quad 25^y = 5^{x-18}$$

ii) மடக்கை அட்டவணையை பயன்படுத்தி பெறுமானம் காண்க.

$$8.24^2 \times \sqrt[3]{0.04168} + 1.251$$

iii) சுருக்குக. $\frac{5}{x^2-9} - \frac{6}{x^2+7x+12}$

iv) தீர்க்க. $\frac{5}{x^2-9} - \frac{6}{x^2+7x+12} = 0$

02) வியாபார நிலையம் ஒன்றில் 30 நாட்களில் அரிசி விற்கப்பட்ட முறைக் கேற்ப பின்வரும் தரவுகள் பெறப்பட்டுள்ளன.

| விற்கப்பட்ட அரிசி (kg) | 0-100 | 100-200 | 200-300 | 300-400 | 400-500 | 500-600 | 600-800 |
|---|---|---|---|---|---|---|---|
| நாட்கள் | 2 | 3 | 6 | 8 | 5 | 4 | 2 |

a) i) மேலேயுள்ள தரவுகளைக் கொண்டு திரள்மீடிறன் வளையியை வரைக.
ii) ஒரு நாளில் விற்ற அரிசியின் இடையத்தை வரைபிலிருந்து காண்க.
iii) வரைபிலிருந்து காலணை இடைவீச்சைக் காண்க.

b) மேலே உள்ள தகவலின்படி நாள் ஒன்றில் விற்கப்பட்ட அரிசியின் இடை அளவு 363.3kg எனக் கணிக்கப்பட்டது. இதன் போது நாள் ஒன்றில் விற்கப்பட்ட அரிசியின் இடை அளவு 350kg என உத்தேசிக்கப்பட்டிருந்தது.
i) விலகல் இடை யாது?
ii) எதிர்வரும் வாரம் ஒன்றிற்கு குறைந்தது எத்தனை kg அரிசியை கடைக் காரர் விற்பார் என எதிர்ப்பார்க்கலாம்.

03) a) 15%வழங்கும் கம்பனியின் ரூ 10பங்குகளை ரூ8படியும், 18%வழங்கும் கம்பனியின் ரூ 10பங்குகளை ரூ 12படியும் வாங்குவத்ற்கு ரூ28000ஐ ஒருவர் முதலீடு செய்கிறார். இருகம்பனிகளிலிருந்தும் அவருக்குக் கிடைக்கும்மொத்த வருமானம் ரூ4800 எனின் ஒவ்வொருகம்பனியிலும்எவ்வளவுமுதலீடுசெய்தார்?

b) $a : b = m : n$ எனின் $n + bn = m + an$ எனக்காட்டுக.

04) a) ஒரு மோட்டார் சைக்கிள் முதல் 30 km ஐ $40kmh^{-1}$ எனும் கதியிலும் அடுத்த 40km ஐ $30kmh^{-1}$ எனும் கதியிலும் இறுதி 70km ஐ $60kmh^{-1}$ எனும் கதியிலும் பயணம் செய்தால் மோட்டார்சைக்கிளின் சராசரி கதியைக் காண்க.

b) ஒரு மனிதன் நிற்கும் இடத்திலிருந்து 500m தூரத்தில் நிறுத்தப்பட்டுள்ள வானூர்தி ஒன்று நிலைக்குத்தாக மேலே எழுகின்றது. 5 செக்கன்களின் பின்னர் அது நிலத்திலிருந்து அம்மனிதனுக்கு $30^0$ ஏற்றக்கோணத்தில் காணப்படுகின்றது எனின் வானூர்தி மேலெழுகின்றவேகத்தைக் காண்க.

05) O வை மையமாகக் கொண்ட வட்டத்தின் விட்டம் AB யும் நாண் CD யும் M இலே செங்குத்தாக இடைவெட்டுகின்றன.




i) CM = MD ஆக இருப்பதற்குரிய காரணத்தைத் தருக.
ii) படத்தில் ACD இற்கு சமனான கோணம் ஒன்றை பெயரிடுக
iii) BMD, CMA என்னும் முக்கோணிகள் இயல பொத்தவை என நிறுவுக.
iv) BMD, CMA ஆகிய முக்கோணிகளின் பக்கங்களுக் கிடையேயுள்ள விகிதங்களை எழுதுக
v) AM = 3cm, CM = 9cm எனின் MB இன் நீளத்தைக் காண்க.
vi) வட்டத்தின் ஆரையைக் காண்க.
vii) AC இன் நீளத்தைக் காண்க. ( "10 = 3.16 எனக் கொள்க )
viii) BC இன் நீளத்தைக் காண்க.

06) a) உருவிலுள்ள தரவுகளின் படி $PS^2 = PQ^2 + QS^2 - 2QS.QR$ என நிறுவுக.

b) PQ = 8cm , QS = 10cm , PS = 6cm எனின் QR ஐ காண்க




கணிதம் வழிகாட்டல் -
திருமலையின் பிரபல ஆசிரியர் T.குமணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

பயிற்சி 12 பாடம் - வரலாறு

பகுதி 02.

01. இலங்கையின் வரலாற்றில் கண்டி இராசதானி அநுராதபுர இராசதானிக்கு அடுத்ததாக நீண்ட காலம் நிலைத்திருந்து.
   1. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும் போது இலங்கையில் இருந்த இராசதானிகளை அதன் மன்னர்களையும் யுடுஇஊ ஒழுங்கில் தருக?
   2. பின்வரும் விடயங்களுடன் தொடர்புடைய மன்னர்களை யுடுஇஊஇனு ஒழுங்கில் எழுதுக
      அ. கண்ணொறுவ போரை வழிநடத்தி வெற்றி பெறல்
      ஆ. 1782 ஆம் ஹியு பொயிட் என்ற ஆங்கிலேயரைச் சந்தித்தல்
      இ. கள்ளிக்கோட்டை சமோரின் உதவியுடன் போர்த்துக்கேயரை விரட்ட நடவடிக்கை எடுத்தல்
      ஈ. வீரசுந்தர பண்டாரவை கொன்று நிக்கம்பிட்டிய பண்டாரவை கண்டி பிரதிநிதியாக நியமித்தல்
   3. 1ம் விமல தர்மசூரியரின் அரசியல் சமயப் பணிகளை சுருக்கமாக விவரிக்குக.
   4. கண்டி இராசதானியை போர்த்துக்கேயர் ஒல்லாந்தரால் கைப்பற்றி கொள்ள எடுத்த முயற்சிகளை முறியடித்து தனது சுதந்திரத்தை பாதுகாத்துக் கொள்ள பங்களித்த காரணிகள் இரண்டை விளக்குக?

02. 1. எனது போராட்டம் எனும் நூலை எழுதுதல்
   2. பாப்பரசருடன் லாத்தரன் உடன்படிக்கையில் ஈடுபடல்
   3. சர்வதேச சங்கத்தை தோற்றுவிப்பதில் முன்னோடியாகத் திகழ்தல்
   அ. .மேற்படி விடயங்களுடன் தொடர்புடைய தலைவர்களைக் குறிப்பிடுக.
   ஆ. இரண்டாம் உலக மகாயுத்த அணிகளைக் குறிப்பிட்டு அதில் பங்கெடுத்த நாடுகள் இரண்டு வீதம் தருக?
   இ. முதலாம் உலக மகாயுத்தத்திற்கு ஜேர்மனி காரணமான விதத்தை இரண்டு விடயங்கள் ஊடாக விளக்குக?
   ஈ. கெடுபிடி போர்க்காலத்தில் ஐக்கிய நாடுகள் சபை மூன்றாம் உலகப் போர் ஏற்படுவதை தடுத்து நின்ற சந்தர்ப்பங்கள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக?

03. கலிங்க மாகனின் படையெடுப்பின் பின் இராசதானி தென்மேற்கு நோக்கி இடம் பெயர்ந்ததுடன் மக்களின் பொருளாதார,சமூக நடவடிக்கையும் மாற்றம் அடைந்தன
   அ. 1. இந்தியாவின் அதிவீர ராம பட்டினத்தை ஆக்கிரமித்தல்
      2. பாண்டி மன்னனுடன் நட்புக் கொண்டு தந்த தாதுவை மீட்டு வந்த மன்னன்
      3. குருணாகலில் அந்துக்கல்புரவை தலை நகராக்குதல்
      மேற்படி நிகழ்வுகளுடன் தொடர்புடைய ஆட்சியாளர்களைத் தருக.
   ஆ. கம்பளை இராசதானியாக தெரிவு செய்யப்பட்டமையில் பங்களித்த காரணிகள் இரண்டைத் தருக?
   இ. 2ம் பராக்கிரம பாகுவின் சமய,அரசியல் பணிகளை சுருக்கமாக விளக்குக.
   ஈ. தென்மேற்கு நோக்கி இடம் பெயர்ந்த காலத்தில் இடம் பெற்ற பொருளாதார மாற்றங்களை விவரிக்குக.

04. 1. அ. இலங்கையில் சட்டவாக்கக் கழகத்திற்கு தெரிவான முதல் கல்வி கற்ற இலங்கையர்
      ஆ. 1818 ஆம் கிளர்ச்சியின் போது பிரித்தானியாருக்கு சார்பாக நடந்து கொண்ட பிரதானி
      இ. 1948 ஆம் ஆண்டு சுதந்திர இலங்கையின் முதல் பிரதமர்
   மேற்படி விடயங்களை தொடர்புடையவர்களை அ, ஆ, இ, ஈ என்ற ஒழுங்கில் தருக.
   2. இலங்கையின் கோப்பிசெய்கை விருத்திக்கு பங்களித்த காரணிகள் இரண்டை தருக?
   3. 1948 ஆம் ஆண்டு கிளர்ச்சிக்கு கோல்புறூக் கமரன் சீர்திருத்தம் காரணமான விதத்தை இரு காரணிகள் ஊடாக விளக்குக.
   4. பெருந்தோட்டத் துறையினால் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்களை சுருக்கமாக விளக்குக.

பகுதி 01

01. குளத்தின் வான் கதவினால் ஆற்றப்படும் பணி
   1. குளக்கட்டைநீரரிப்பிலிருந்துபாதுகாத்தல்
   2. குளத்துக்குள் சேரும் அடையல்,உக்கல்களைத் தடுத்தல்
   3. குளத்தின் மேலதிகநீரைவெளியேற்றல்
   4. குளத்தின் நீரைகால்வாய்க்குவிடுவித்தல்

02. பின்வருவனவற்றுள் சேர்.பொன்.இராமநாதனின் சேவை தொடர்பான கூற்று எது?
   1. வண்ணார்பண்ணையில் ஆங்கிலப்பாடசாலை ஒன்று ஆரம்பித்தமை
   2. பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்தமை
   3. சைவபரிபாலன சபையினை ஆரம்பித்தமை
   4. பரமேஸ்வராக் கல்லூரியைக் கட்டுவித்தமை

ஆசிரியர் :
த. அகிலன், Dip. in Tech. (Merit)
புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை
வெற்றிப்படி ஆசிரியர், ஆறுதல் நிறுவன வரலாற்றுப் பாட ஆசிரியர்

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 06

பிரதீபா

1. வீட்டுத் தோட்டமொன்றில் ஒரு பயிரை நடுதல் தொடர்பான தகவல்கள் ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளன.
   அ. தினமும் பாத்திகளுக்கு நீரூற்றல்
   ஆ. நிலத்தை உழுது பண்படுத்தல்
   இ. வித்துக்கள் முளைத்து நன்றாக வளருதல்
   ஈ. பாத்திகளை தயார்படுத்தல்.
   உ. வித்துக்களை பாத்திகளில் நடுதல்
   இதனை ஒழுங்கு வரிசைப்படி காட்டுவது எது?
   1. ஆ,ஈ,இ,அ,உ 2. ஆ,ஈ,உ,அ,இ 3. ஈ,ஆ,இ,உ,அ
2. மின்காந்தம் பயன்படுத்தப்படும் மின்சாதனம் பின்வருவனவற்றுள் எது?
   1. மின்மணி 2. பாரம் தூக்கி 3. மின் அடுப்பு
3. கசப்புச் சுவையுடைய இலை எது?
   1. குறிஞ்சா 2. குமுட்டி 3. பசளை
4. கொத்தாக பூக்கும் தாவரம் எது?
   1. ரோசா 2. அந்தூரியம் 3. சூரியகாந்தி
5. பூச்சியுண்ணித் தாவரங்கள் பூச்சிகளை பிடித்து உண்ணுவதற்கு காரணம் எது?
   1. தாவர உணவை உண்பதற்காக
   2. பூச்சிகளைப் பிடித்து உண்பதால் பூச்சிகளைக் கொல்லுதல்
   3. பூச்சியை சமிபாடடையச் செய்து நைதரசனை பெற
6. “மாம்பட்டை மருதம்பட்டை வௌவாலோடிய தென்னம் பட்டை......” என்ற கிராமிய பாடலுடன் தொடர்புடைய விளையாட்டு எது?
   1. சடுகுடு 2. கிட்டிப்புள் 3. கபடி
7. உலகின் முதலாவது .................. ஸ்புட்னிக் ஆகும்.
   1. சேர்க்கைக் கோள் 2. செயற்கைக் கோல்
   3. செயற்கைக் கோள்
8. இலக்கம் 2, இலக்கம் 4 எழுதப்பட்ட எண் அட்டைகள் ஒரு பெட்டியினுள் இருந்தன. எண் அட்டைகளிலுள்ள எண்களின் கூட்டுத்தொகை 36 ஆகும். எண் அட்டைகளை எண்ணிய போது 12 இருந்தன. இதில் இலக்கம் 2, இலக்கம் 4 கொண்ட அட்டைகளின் எண்ணிக்கைகள் முறையே
   1. 5, 7 2. 7, 5 3. 6, 6
9. வீட்டுத் தோட்டத்தின் மூலம் கிடைக்கும் பயன் அல்லாதது எது?
   1. நச்சுத்தன்மையற்ற காய்கறிகளைப் பெறலாம்
   2. அதிக விளைச்சலைப் பெற முடியும்
   3. உடன் காய்கறி பெறலாம்
10. நீரில் மிதக்கக்கூடிய பொருள் எது?
   1. தக்கை 2. சீனி 3. உப்பு
11. ஒரு வகுப்பறையில் 35 மாணவர்கள் இருக்கலாம் எனில் 96 மாணவர்கள் இருப்பதற்கு தேவையான வகுப்பறைகளின் எண்ணிக்கை யாது?
   1. 3 2. 2 3. 4
12. வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணை தெரிக.
   1497 = 1000 + 299 + ______ - 35
   1. 163 2. 33 3. 233
13. கிரிக்கட் வீரரொருவர் 4 ஓட்டங்களில் 8உம், 6 ஓட்டங்களில் 12உம் பெற்றார். எனின் அவர் பெற்ற ஓட்டங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
   1. 104 2. 96 3. 20
14. 2000 ஆம் ஆண்டு லீப் வருடமாகும். 2001ம் ஆண்டின் டிசம்பர் 31ந் திகதி திங்கட்கிழமை எனில், 2009 ஆம் ஆண்டின் டிசம்பர் 31ந் திகதி என்ன கிழமையாகவிருக்கும்?
   1. வியாழன் 2. செவ்வாய் 3. புதன்
15. ஒரு நகரத்தில் ஆண்கள் பாடசாலை, பெண்கள் பாடசாலை, கலவன் பாடசாலைகள் என மொத்தமாக 35 பாடசாலைகள் உள்ளன. அதில் 21 பாடசாலைகளில் ஆண் பிள்ளைகளும் 24 பாடசாலைகளில் பெண் பிள்ளைகளும் கற்கின்றனர் எனின், கலவன் பாடசாலைகள் எத்தனை உண்டு?
   1. 10 2. 12 3. 8
16. ஆந்தை அலறும் என்பது போல யானை?
   1. கனைக்கும் 2. பிளிறும் 3. உறுமும்
17. தந்தையிடம் உள்ள காணியில் 2/10 பங்கை மகனுக்கும், 3/5 பங்கை மகளுக்கும் கொடுத்தால், தந்தையிடம் எஞ்சியுள்ள காணி என்ன பங்கு?
   1. 2/10 2. 2/5 3. 10/15
18. பொழுதினை ஒழுங்கு முறைப்படி காட்டும் விடை எது?
   1. பகல், மாலை, காலை, இரவு 2. இரவு, பகல், மாலை, காலை 3. காலை, பகல், மாலை, இரவு

பெயர்: ..................................................
..................................................
முகவரி: ..................................................
..................................................
..................................................
பாடசாலை: ..................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.
மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இறைவழியில் ஓர் நீண்ட நாள்ஆசை

அழகிய கிராமத்தில் ஒரு நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த நபிக் சில்மியா இருவருக்கும் பிறந்தவள் தான் றிபானா இவள் மூத்த மகள் இவளுக்கு அடுத்தடுத்து இரண்டு தங்கைகள் அவர்கள் பாடசாலையில் கல்வி கற்கின்றார்கள். ஆனால் இவள் வறுமை காரணமாக தனது படிப்பை பாதியிலேயே நிருத்தி விட்டு தையல் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள்.

மார்க்கப் பற்று நிறைந்த பெண் மனியாகவும் அடக்கம் ஒழுக்க குணம் கொண்டவளாகவும்திகழ்ந்தாள். என்ன வினோதம் றிபானாவை எத்தனை பேர் பெண் பார்த்து விட்டுச் சென்றார்கள். பதில் ஏதும் இல்லை. அவள் இதற்கெல்லாம் கவலைப்பட வில்லை. அல்லாஹ்வை புகழ்ந்தவளாக தனக்குள்ளே தினம் தினம் "அல்ஹம்து லில்லாஹ்" என்று கூறிக்கொள்வாள் இவளைப் பெண்பார்க்க வந்தவர்களில் வாயில் மார்க்கப்பறுள்ள பெண் என்ற அம்சத்துக்கு இடமே இல்லை சீதனம் என்ற சொற்றொடரையே பாவித்தனர்.

என்ன கொடுமை வறுமை காரணமாக இவனின் திருமணம் தடைப்பட்டுக் கொண்டே சென்றது. அன்றொருநாள் றிபானா பஜ்ருடைய தொழுகையை முடித்து விட்டு அவசர அவசரமாக வீட்டு வேலைகளை தாயோடு சேர்ந்து செய்து கொண்டிருந்தாள் தந்தை திடீரென தாயிடம் வந்து கூறிய வார்த்தையை தாயின் பக்கத்திலிருந்து றிப்னா நம்ப முடியவில்லை தந்தை அப்படி என்ன விடயம்தான் தாயிடம் கூறியிருப்பார். என்ற கேள்விக்கு விடை தேடினாள் றிபானா.

ஆதம் லெப்பை பாத்திமா நுஸ்ரா
ஆனைச் சேனை
மூதூர் - 02

தொடரும்.........

# சீரழிக்கும் சினிமா

சீரழிக்கும் சினிமாவை, தீவிரமாய் பார்க்கிறோம்
சீர்திருத்தும் சுன்னாவை, சாரமாக்கி விடுகிறோம்
செந்தமிழ் நாட்டானை, சொந்தமாய் புகழ்கிறோம்
சேர்ந்திருக்கும் உறவுதனை, சோகத்தில் வீழ்த்துகிறோம்.

அஜீத்தை நண்பனாக்கி, அண்ணனை விரோதியாக்கி
கரீஷ்மாவை வாழ்வின் கதாநாயகியாக்கி
ஹதீஜாவின் வாழ்வின் கேவலமாக்கி
பாத்திமாக்களாய் பாரில் வர என்ன தைரியம்?

சீரழிக்கும் சினிமாவின் நாயகியும், நாயகனும்
அவரவர் நாட்டில் சுகமாய் வாழ
நற்குணம் பொருந்திய நபியும் மண்ணறையில் சுகமாய் வாழ



மண்ணறை வாழ்வை ஏன் மறக்கிறாய்?
மாண்புகுமிகு மார்க்கத்தை ஏன் மறைக்கிறாய்?
விரும்பாதே சினிமாவை, இனிமேலும்! வீரநடை போட்டிடு மார்க்கத்தில்
வெறுத்திடு சினிமாவை அடியோடு
விரும்பிடு நேர்வழியை முறையோடு

வஸ்ஸலாம்

# பெற்றோர்களே ! ஸாலிஹான பிள்ளைகளே உருவாக்குங்கள்

இஸ்லாமிய குடும்பங்களில் பிறக்கின்ற ஒவ்வொரு பிள்ளையும் தான் ஏற்றிருக்கக் கூடிய மார்க்கத்தைப் படிப்பது கட்டாயமான ஒன்றாகும். ஏனெனில் தாம் ஏற்றிருக்கும் மார்க்கம் ஒன்றைக் கூற தமது போக்கு வேறொன்றாக அமையும் போது தன்னை ஓர் இஸ்லாமியன் என்று கூறிக் கொள்வதில் எவ்விதப் பயனுமில்லை.

எனவே பெயரில் மாத்திரம் தான் ஓர் இஸ்லா மியன் என்று வெளிகாட்டாமல். செயலிலும். வெளிக்காட்ட வேண்டும். இதற்கு சிறந்த வாய்ப்பாக இந்தச் சிறுபராயம் அமைகின்றது. இப்பருவத்தில் எதைப் புகட்டினாலும் உடன் பதிந்து விடுகின்றது. மார்க்க சட்டதிட்டங்களையும் நபியவர்களது நற்பண்புகளையும் இப்பருவத்தில் புகட்டுகையில் அவை பசுமரத்தாணிபோல் அவர்களது இதயங்களில் பதிந்து விடுகின்றன.

சிறு பராயமே மிக முக்கிய மானது ஏனெனில் அப்பருவமே ஒருவனின் எதிர்கால சடவடிக்கைகளைத் தீர்மானிக்கும். அம்சமாக காணப்படுகின்றது. இப்பருவத்தில் அவர்களுக்கு நற்போதனைகளும் சிறந்த வழிகாட்டல்களும் வழங்கப்படுமானால் நிச்சயமாக அவர்கள் எதிர்காலத்தில் நல்ல மனிதர்களாக உலாவருவார்கள் மாற்றாக தீய வழிகாட்டல்கள் அவர்களுக்குப் புகட்டப்படும் போது மக்களின் சபாத்திற்கும் கோபத்திற்கும் உள்ளாக்கப்பட்டு பூமியில் உலா வருவார்கள். இந்நிலை இருதியில் அவர்களின் பிறப்பில் குறை கூறுவதற்கும். பெற்றோரின் கௌரவத்தை குழிதோண்டிப் புதைப்பதற்கும் வழிவகுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

சிறுவர்கள் என்போர் கொல்வன் உலையில் இட்டு காய்த்து எடுத்த செந்நிற இரும்பைப் போன்றவர்கள். அக் கொல்லவன் தான் விரும்பிய வகையில் அவ்விரும்பை வடிவமைக்கின்றான். இப்படித்தான் சிறுவர்களும் தங்களுக்கு சிறுவயதில் வழங்கப்படுகின்றன.

அப்துல் ஜபார் நளிமியா

தொடரும்.........




# சமையல் குறிப்பு



## குலப்ஜாமுன்

**தேவையான பொருட்கள்:** சீனி-06மே.கரண்டிநிரப்பி 100g, பார்மா-05மே.கரண்டி நிரப்பி, தயிர்-04மே.கரண்டிநிரப்பி, மாஜரீன்-01மே.கரண்டிநிரப்பி, வனிலா-02 மே.கரண்டிநிரப்பி, ஏலப்பொடி-02 சிட்டிஎவு, தண்ணீர்-10மே.கரண்டி/1/2தம்ளர், நெங்-1/8போத்தல்.

**செய்முறை:-** பாத்திரத்தில் பால்மாவையிட்டுத், தயிர்,மாஜரின்,1மே.கரண்டி வனிலா என்பவற்றைப் பால் மாவுடன் சேர்த்துக்கையி லொட்டாது பதத்திற்கு நன்றாகப் பிசைந்து அடித்துக் குழைத்துக் கொள்க.

தாச்சியில் சீனியைப் போட்டு 10மே.க தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சக காய்ச்சும் போது முதலில் சீனிமுழுவதும் கரைந்து பாகு பொங்கிக் கொதிக்கத் தொடங்கியதும் உடனடியாக அடுப்பிலிருந்து இறக்கி 1மே.கரண்டி வனிலா ஏலம்பொடி என்பன கலந்து கலக்கிவைத்துக் கொள்க.

பின்பு பிறதொரு தாச்சியில் நெய்யைக் காயவைத்து நெய் கொதிக்கத் தொடங்கியதும் குழைத்து வைத்துள்ள மாக்கலவையை நெல்லிக்காய்யளவு உருண்டைகளாக அழுத்தமாக உருட்டி யெடுத்து கொதிக்கும் நெய்யில் உருண்டைகள் முழுவதும் மூழ்கும்படி போட்டுச் சிவக்கப் பொரித் தெடும்மு உடனடியாக காய்ச்சிவைத்துள்ள பாகினுள்ப்போட்டு ஒரு மணிநேரம் வரை ஊறவைத்துக் கொள்க.

# அழகுக் குறிப்பு

## இளநரை மாற



சிலருக்கு இளம் வயதிலேயே ஆங்காங்கே வெள்ளை முடி தோன்றுவது இயல் பாகிவிட்டது. இதற்கு நெல்லிக் காய், கறிவேப் பிள்ளை இவற்றை எலுமிச்சைசாறு விட்டு நன்றாக அரைத்து தலையில் தேய்த்து குளித்து வந்தால் இளநரை மறையும்.

## முகம் பளபளக்க



குளிர்ந்த நீர்1/2டம்ளர், பசு பால் 5மமிலி இரண்டையும் ஒன்றாக கலந்து பஞ்சில் நனைத்து முகத்தில் பூசவும் அரைமணி நேரம் சென்றதும். முகத்தை நன்றாக மென்மை யாக கழுவவும் சோப், கீரிம்களை பயன் படுத்தக் கூடாது. பருத்தியினால் ஆன துண்டைவைத்து முகத்தைத் துடைக்க வேண்டும் தினமும் இவ்வாறு செய்து வந்தால் முகம் பளபளக்கும்.

## கழுத்துப் பராமரிப்பு



சிலருக்கு நகைகள் அணிவதால் கழுத்தில் கருவளையம் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது இதைப் போக்க கோதுமை மாவில் வெண்ணெயை கலந்து கழுத்தைச் சுற்றிப் பூசிவர வேண்டும் பின் 20 நிமிடங்கள் அழுத்து குளிக்கவும் இப்படி தொடர்ந்து தினமும் செய்து வந்தால் கழுத்தில் உள்ள கருவளையம் படிப்படியாக மறைந்து விடும். சிறிய சூடாக்கப்பட்ட நல்லெண்ணெய்யினால் கழுத்துப் பகுதியில் மசாஜ் செய்தால் கழுத்து பகுதியில் உள்ள சுருக்கம், கருப்பு வளையம் படிப்படியாக நீங்கிவிடும்.

## பொதுவான குறிப்புகள்

* அழகான கன்னங்களுக்கு முதலில் அதிகாலையில் எழுந்து பழகும் பெண்களுக்கு இயற்கையாக சுத்தமான காற்று கிடைக்கிறது. இதனால் முகத்தில் ஒரு வித பொலிவு கிடைக்கும்.

* மிதமான சுடுநீரில் சிறிதளவு உப்பு கலந்து பத்து நிமிடம் வாய்க்குள் வைத்து பின் கொப்பளிப்பது நல்லது இப்படி தொடர்ந்து செய்வதால் கன்னத்தின் அழகு அதிகரிக்கும்.

* சந்தனம்,மஞ்சள் போன்றவற்றை பொடியாக்கி முகத்தில்,கை,கால்களில் தடவலாம். வறண்ட சருமத்தைக் கொண்டவர்கள், பால் வெண்ணை கலந்து குழைத்துப் பூச வேண்டும்.

* எண்ணெய்த் தன்மை கொண்ட சருமத்தை உடையவர்கள் வெள்ளரிக் காய்சாறு, எலும்ச்சம் பழச்சாறு, தக்காளிச்சாறு ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை கலந்து சிறிதளவு தேனும் சேர்த்து உடலில் பூசலாம்.

* முகபருப் இருப்பவர்கள் வேப்பமரப் பட்டையை வெண்ணையில் அரைத்துக் தடவுவது நல்லது. மஞ்சளை, கறிவேப் பிலையுடன் சேர்த்து அரைத்து முகப்பரு இருக்கும் இடத்தில் தடவினால் முகப்பரு மற்றும் அதனால் ஏற்பட்ட வடுக்களும் மறையும் அரை மணி நேரம் கழித்துக் கழுவி விட்டால் முகப்பரு தொல்லை ஏற்படாது.



ஷிவினா
அழகு நிலையம்
இல.325, பிரதான வீதி, திருகோணமலை

## முக்ப்பருவைப் போக்க

* அதிக எண்ணெய்ப்பசை இருந்தால் முகத்தில் பருவர வாய்ப்புக்கள் அதிகம் ஆகையால் எண்ணெய்ப்பசை இல்லாமற் பார்க்கவும் இதைத்தடுக்க தேவையான பொருட்கள்: 1தே.கரண்டி ஒரேஞ் பழச்சாற்றை 1தே.கரண்டி குளிர்ந்த நீரில் கலந்து முகத்தில் தடவி 1/2 மணிநேரம் ஊற வைத்த பிறகு மிருதுவாக துடைக்கவும்.

பருவை விரல்களால் கிள்ளாதீர்கள் கிள்ளினால் முகத்தில் மாறா வடுக்கள் தோன்றும் எருமைப் பாலாடையை இரவில் பருவின் மேல் தடவலாம் காலையில் எழுந்ததும் சோப் போட்டு முகம் கழுவுங்கள்.

பைத்தமா, கடலைமா, காய்ந்த ரோஜா இதழ், கஸ்தூரி மஞ்சள் ஆகியவற்றை ஒன்றாக அரைத்து முகத்தில் தடவி காய்ந்தவுடன் அலசவும்.

Ashwini beauty Parlor

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரவு செலவுத்திட்டத் துளிகள் - 2014

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மின்னுற்பத்தி 600 மெகாவாற்றுக்களால் அதிகரிக்கப்படும்.

உள்நாட்டு ஏற்றுமதி வருவாய் 10000 மில்லி. டொலர்களாக அதிகரிக்கப்படும்

தொலைத்தொடர்பு வரியில் மாற்றம் இல்லை - 25 வீதமே

வங்கிகளும் நிதி நிறுவனங்களும் 2வீத அதிகரித்த தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியை செலுத்த வேண்டும்

அரச நிறுவனங்களும், வங்கிகளும் தனியார் மயமாகாது.

வெளிநாட்டவர்களுக்கு காணி 15வீத வரியுடன் குத்தகைக்கு மட்டுமே வழங்கலாம்.

உரமானியம் 350.00 ரூபா ஆகும் - 2014ல் இருந்து விவசாயிகளுக்கும் ஒய்வு ஊதியம்.

சிறுதேயிலைத் தோட்டங்களுக்கு ஏக்கருக்கு 5000 ரூபா மானியம்

20,000 பசுமாடுகள் இறக்குமதி கால்நடை வைத்தியர்களுக்கு மேலதிகப் படி ரூபா 7500.00

திவிநெகும வில் 125,000 பண்ணைகள் - பண்ணையாளருக்கு 10000 ரூபா மாதாந்த ஊக்குவிப்பு

வைத்தியசாலை ஊழியரின் சீருடைக் கொடுப்பனவு 1500 ஆகின்றது.

பல்கலை. விரிவுரையாளருக்கு 5வீத கல்விக் கொடுப்பனவு

தகவல் தொழில்நுட்பத்திற்கு ஆயிரம் மில்லியன்

கடற்படை, கடல்சார் பல்கலைக் கழகம் நிறுவப்படும்.

வீட்டு வசதிச் சலுகைக் கடன்

கொழும்புக்கு இணையாக கண்டி, காலி, அனுராதபுரம், யாழ்ப்பாணம், இரத்தினபுரி, திருகோணமலை அபிவிருத்தி

அரச ஊழியருக்கு வாழ்வாதாரக் கொடுப்பனவு 1200.00 - தேசிய சம்பளத் திட்டம் உருவாக்கப்படும்.

நீதிபதிகளுக்கு 8வீத தனிப்பட்ட கொடுப்பனவு

## தொலைபேசிக் கட்டணங்கள் அதிகரிப்பு

கையடக்க மற்றும் நிலையான தொலைபேசிகளுக்கான கட்டணம் 5 சதவீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது. இந்த நடைமுறை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அமுல்படுத்தப்படவுள்ளது என தொலைத்தொடர்புகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## "ஆசிரிய நியமனத்தில் திருமலைத் தமிழ் பாடசாலைகள் புறக்கணிப்பு"

"கிழக்கு மாகாணத்தில் தற்போது வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர் நியமனத்தின்போது திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தமிழ் பாடசாலைகள் முற்றாக புறக்கணிக்கப் பட்டுள்ளன" என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் திருகோணமலை நகரசபை உறுப்பினரான சி.நந்தகுமார் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

"திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பல தமிழ் பாடசாலைகளில் பல்வேறு பாடங்களுக்கும் ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுகின்றபோதும் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படாது புறக்கணிக்கப்படுவது கவலைக்குறியது.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சு திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் பாடசாலைகளில் முஸ்லிம் பாடசாலைகளின் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்ட விபரங்களை வெளியிடத்தயாரா? என கேள்வி எழுப்பியுள்ளார் அவர். அத்துடன் இவ்விடயத்தை மாகாண எதிர்கட்சித் தலைவருக்குத் தெரியப் படுத்தப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

## தாழங்குடா றோ.க தமிழ்க் கலவன் பாடசாலையின் கௌரவிப்பு விழா

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் ஆங்கில தினப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு மட்-தாழங்குடா றோமன் கத்தோலிக்கத் தமிழ்கலவன் பாடசாலையில் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அதிபர் திரு.க.தங்கராசா தலைமையில் இடம் பெறவுள்ளது. அதிதிகளாக மட்-வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. சுபா சக்கரவர்த்தி அவர்களும் ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.கே.சந்திரகுமார் அவர்களும் ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகர்களும் கோட்டக் கல்விப் பணிப்பாளரும் கலந்து கொள்ள வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முருகன் ஆலய பாற்குட பவனி



மட்டக்களப்பு நாவற்குடா அருள்மிகு சிறிபால முருகன் ஆலய பாற்குடபவனி செவ்வாய்க் கிழமை காலை இடம் பெற்றது. கலந்து கொண்ட அடியார்கள் பாற்குடமேந்திச் செல்லும் காட்சியினைப் படங்களில் காணலாம்.



## மட்டு மிக்கேல் மாணவன் அகால மரணம்




கொழும்பு சென்தோமஸ் கல்லூரி நீச்சல் தடாகத்தில் மூழ்கி மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு சென்தோமஸ் கல்லூரிக்கும் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரிக்கும் இடையில் நடைபெறவிருந்த க்ரோதர் சலஞ் வெற்றிக் கிண்ணத்துக்கான (பிக் மச்) கூடைப்பந்தாட்டப் போட்டிக்காகச் சென்ற யூஜின் டிலக்சன் (15) மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

10ஆம் வகுப்பில் கல்வி கற்கும் இம் மாணவனின் தந்தை மட்டக்களப்பு சிறைச்சாலையில் பணியாற்றுகிறார்.

மட்டக்களப்பிலிருந்து

வெள்ளிக்கிழமை காலை கொழும்புக்குச் சென்ற புனித மிக்கேல் கல்லூரியின் மாணவர்கள் 30 பேர் நீச்சல் தடாகத்தில் நீராடிவிட்டு இரவு உணவுக்காகச் சென்றுள்ளனர்.

அப்போது ஒருவரைக் காணவில்லை என்று தேடிய போது அவர் நீச்சல் தடாகத்தில் 13 அடி ஆழமான பகுதியில் இரவு 9.10 மணியளவில் சடலமாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளார்.

பின்னர் சடலம் மீட்கப்பட்டு களுபோவில வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மரண விசாரணை, பிரேதப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

சடலம் 16ம் திகதி மட்டக்களப்புக்கு கொண்டு செல்லப்பட்டது.

அதேநேரம், இவ் மாணவனின் மரணம் காரணமாக நடைபெறவிருந்த இந்த கூடைப்பந்தாட்டப் போட்டி நிறுத்தப்பட்டது.

15 வயதுக்குட்பட்டவர்களும், 19 வயதுக்குட்டவர்களுமாக இரண்டு அணிகளுக்கு இப்போட்டி நடைபெறவிருந்தது. 1994களில் ஆரம்பிக்கப்பட்ட இப் போட்டி அதன் பின்னர் 2004 ஆம் ஆண்டு இரண்டு கல்லூரிகளுக்கும் இடையில் நடைபெற்றுள்ளது. அதன் பின்னர் நிறுத்தப்பட்டு இந்தவருடமே இப்போட்டி நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (நிரேஸ்)

## காப்பாற்றச் சென்றவரைக் கடல் கொண்டது



கடலில் மூழ்கிய இருவரை மீட்பதற்காக சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவு, நாசிவன்தீவு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை அக்பர் பள்ளி வீதியைச் சேர்ந்த அல் ஹாபீஸ் மீராமுகைதீன் முஹம்மது பயாஸ் என்ற இளைஞரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

மேற்படி இளைஞர், வியாழக்கிழமை (21) காலை குடும்பத்தாருடன் நாசிவன் தீவு கடற்கரைக்குச் குளிக்கச் சென்றபோது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தங்களுடன் வந்த இருவர் நீரில் மூழ்கியதைக் கண்டு அவர்களைக் காப்பாற்றுவதற்கு இவர் முயற்சித்த சமயம் இச்சம்பவம் நிகழ்ந்ததாக உயிரிழந்தவரின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

மரண விசாரணைகளின் பின்னர் சடலம் இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் வாழைச்சேனை மஸ்ஜிதுல் ஹைறாத் பள்ளிவாயல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

வாழைச்சேனை குல்லியதுன் நஹ்ஜதுல் இஸ்லாமியா அரபுக் கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆஸியிலிருந்து மீண்டனர் 79 இலங்கையர்

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்கு படகு மூலம் சென்றவர்களில் 79பேர் பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். கடந்த 10ஆம் திகதி அவுஸ்திரேலியா சென்றடைந்த குழுவொன்றே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கின் காணி மாநாடு



கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள காணி பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் விசேட மாநாடொன்று நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது. அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இந்த கூட்டம் நடைபெற்றது.

03

UK Sponsor Visa விற்குரிய
B1 Level
ஆங்கில வகுப்புக்கள்
Join
Veal Business College.
159A, Seaview Road,
Trincomalee.
T.P. 026 2227622
0770203201

## டீசலில் மண்எண்ணை வீடு திரும்பின படகுகள்

கொட்பே மீனபடித் துறைமுகத்தில் ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளுக்கு வழங்கப்பட்ட மண்ணெண்ணையில் டீசல் கலந்திருந்ததாக எழுந்த சந்தேகத்தை அடுத்து படகுகள் யாவும் கட்டுக்குத் திரும்பியுள்ளன.

குறித்த கலப்பட எரிபொருளைப் பாவித்த இரண்டு படகுகளின் குதிரைவலு

03

# கிழக்கு மக்களுக்கு அரச நிவாரணம்

வன்முறைகளால் பாதிக்கப் பட்ட கிழக்கு மாகாண மக்களிற்கு நிவாரணம் வழங்கும் நிகழ்வொன்று திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் கடந்த 19ம் திகதி நடந்தேறியுள்ளது.

1990ம் ஆண்டுக்காலத்தில் வன்முறைகள் காரணமாக வீடு, நிலம் மற்றும் உடமைகளை இழந்தோரில் இழப்பீட்டைக் கோரிக் கடிதம் மூலம் விண்ணப்பித்தவர்களில் தெரிவானோருக்கே இந் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தல்களை அடிப்படையாகக் கொண்டு 160 சிங்களவர்களுக்கும் 92 தமிழ் பேசுபவர்களுக்கும் இந்நிவாரணம் வழங்கப்

03

**"கிழக்கின் சிறுபான்மையினருக்கே பெருமளவு நிவாரணம்"**

# ஆர்ப்பாட்டத்தில் மக்கள் - அமளிதுமளியில் கூட்டம்

ஆரையம்பதி பிரதேசத்தில் உள்ள தமது காணிகளில் குடியேற சிலர் தடை விதிப்பதாகவும் தமது காணியில் குடியேற தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்து மண்முனைப்பற்றில் உள்ள சில முஸ்லிம் மக்கள் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மண்முனைப்பற்று பிரதேசத்தில் உள்ள



தமக்கு சொந்தமான காணிகளை பராமரிப்பதற்கு சிலர் தடைகளை ஏற்படுத்துவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் தெரிவித்தனர்.

முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பரீட் தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதுடன், இன்றைய தினம் மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் நடைபெறவிருந்த நிலையில் கூட்டத்துக்கு வந்தவர்களும் தடுக்கப்பட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து

03

## விபுலானந்தாவில் ஆசிரியர் தின விழா



திருகோணமலை விபுலானந்தா கல்லூரியில் கடந்த 24.10.2013 அன்று ஆசிரியர் தின விழா நடைபெற்றது.

அந் நிகழ்வில் சானாதிபதி விருதான "பிரதீபா பிரபா" விருது பெற்ற ஆசிரியர்களுக்கான கௌரவிப்பும் நிகழ்ந்துள்ளது.

விபுலானந்தா பாடசாலை வரலாற்றில் முதற் தடவையாக பிரதீபா பிரபா விருது பெற்ற பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி உதயா வரேந்திரராஜா கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற

03



## பொதுநலவாயக் கட்டுரைப் போட்டிப் பரிசை வென்றார் நிலக்ஸலா சந்திரகுமார்

பொதுநலவாய நாடுகளின் மகாநாட்டினை முன்னிட்டு பாடசாலைகளுக்கிடையிலான கட்டுரைப் போட்டியில் மட்-விவேகானந்த மகளிர் மகா வித்தியாலய மாணவி செல்வி.நிலக்ஸலா சந்திரகுமார் அவர்கள் அகில இலங்கை ரீதியில் மூன்றாமிடத்தைப் பெற்று அப்பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். அதற்காக அவரை கௌரவித்த நிகழ்வும் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டுப் பாடசாலையில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவிகளுக்கான பரிசில்களும் கலந்து கொண்ட அதிதிகளால் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (சச்சு)





Admission Open
திருகோணமலையில்
ஒரேயொரு மும்மொழிச் சிறுவர் பாடசாலை
(தமிழ் / ஆங்கிலம் / சிங்களம்)
சிறார்களுக்கான அனுமதி ஆரம்பம்
வயது 2 1/2 தொடக்கம்
வேல் சிறார் பள்ளி
Veal Montessori

No. 159A Sea View Road,
Trincomalee.
T.P 026 2227622
No.27, Lavender Lane,
Trincomalee.
T.P 026 3204840

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org